விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 | மாசி 21 | ஐ. ஆகி 23 | இதழ் 23
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 6 3 1986

● யாழ். கோட்டைமுகாம் செல்லவிருந்த

# 125 கிராமசேவையாளர் கடத்தப்பட்டு விடுதலை!

(ஐ. சண் முகலிங்கம்)

**யாழ். கோட்டை இராணுவ முகாமுக்குச் செல்லவிருந்த சுமார் நூற்று இருபத்துஐந்து கிராமசேவையாளர்கள் (கிராமசேவை அலுவலர்கள்) நேற்றுக் காலை யாழ். செயலகம் அருகில் கடத்தப்பட்டு, எட்டு மணித்தியாலங்களுக்குப் பின்னர் எச்சரிக்கைசெய்யப்பட்டு நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர்.**

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் இந்தச்சம்பவம் நடந்தது. கடத்தப்பட்ட வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்ஸொன்றிலும், இரண்டு மினிவானிலும் ஆயுதங்களுடன்வந்த பதினைந்துக்கும்மேற்பட்ட இளைஞர்கள் கிராம சேவையாளர்களை பயமுறுத்தி வாகனங்களில் ஏற்றிச்சென்றனர்.

யாழ். கோட்டை இராணுவ முகாமில் பிரிகேடியர் எச். எஸ் ரூ சிங்கா மற்றும் இராணுவ உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு படையினரை யாழ். மாவட்டத்திலுள்ள 139 கிராமசேவையாளர்கள் நேற்றுக்காலை 9-30மணிக்கு சந்திக்கவிருந்தனர்.

பிரிகேடியரின் கோரிக்கைப்படி யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராமசேவை

(5-ம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு பத்திரிகையாளர்

## கொழும்பு விஜயம்

(கொழும்பு)

வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் குழுவொன்று நேற்று முன்தினம் கொழும்பு வந்தது. 'லண்டன் கார்டியன்' பத்திரிகையைச் சேர்ந்த ஒருவரும், பிரான்ஸ், அவுஸ்திரேலியா நாடுகளைச் சேர்ந்த இருவரும் இக்குழுவில் உள்ளனர்.

நான்குநாள் விஜயத்தை மேற்கொண்டு வந்த இவர்கள் வடக்கு, கிழக்கு செல்ல அனுமதி கேட்டதாகவும், அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

நேற்று இவர்கள் கலாநிதி நீலன் திருச்செல்வத்தை சந்தித்தனர்.

பல்வேறு பிரஜைகள் குழுவினரையும் சந்திக்க ஏர்பாடு செய்துள்ளனர்.

## புலி! புலி! புலி!

[கொழும்பு]

''வடக்கிலும் புலி, கிழக்கிலும் புலி, தமிழ் நாட்டிலும் புலி, மலைநாட்டிலும் புலி, நாட்டின் எல்லாப் பகுதிக்கும் புலி வந்துவிட்டது'' என்று கொத்மலை எம். பி. திரு. ஆனந்த தஸநாயக்கா பாராளுமன்றத்தில் நேற்று பேசுகையில் ஒரு கட்டத்தில் கூறினர்.

[ய-பி]

## 'பூஸா'விலிருந்து 35 பேர் விடுதலை

[திருகோணமலை]

திருகோணமலையில் கைது செய்யப்பட்டு பூஸாமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 35 பேர் நாளை வெள்ளி கிழமை விடுவிக்கப்படவுள்ளதாக திருமலை பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

[மா]

செலவை பகிர்ந்துகொள்ளுமாறு

## இலங்கை கேட்கப்படுமா?

(சென்னை)

''பாரதத்துக்கு இலங்கை அகதிகளால் ஏற்படும் செலவைப் பகிர்ந்துகொள்ளுமாறு இலங்கை அரசைக் கேட்டுக்கொள்வது குறித்து பாரதம் இப்பொழுது பரிசீலித்து வருகிறது

பாரத வெளியுறவு உதவி அமைச்சர் திரு. கே, ஆர். நாராயணன் லோகசபையில் கேள்விநேரத்தின்போது எழுத்து மூலமான தனது பதிலில்மேற்படிதெரிவித்தார்.

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி அண்மையில் பாரதத்திலிருந்து அகதிகள் எவரும் திரும்பி இலங்கைக்குச் செல்ல

[5ம் பக்கம் பார்க்க]

## "வாய்ப்பேச்சு வேண்டாம்! செயலில் தீர்வுகாண வேண்டும்!"

### ராஜீவ் கோரிக்கை

(புதுடில்லி)

''இலங்கைஇனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வு என்று வாயப்பேச்சினுல் மட்டும் கூறினுல் போதது, செயல்முறையில் இனப்பிரச்னைக்கு தீர்வுகாண இலங்கையரசு முயற்சிக்க வேண்டும். இதனையே பாரதம் விரும்புகிறது'' என்று ராஜ்யசபையில் ராஷ்டிரபதி உரைமீதான விவாதத்துக்கு பதிலளித்துப்பேசுகையில் பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கூறினர்.

''இலங்கையில் குடிமக்கள் தொடர்ந்து கொல்லப்படுகிருர்கள். நாள்தோறும் ஒன்றுமறியாத மக்களின் உயிர்கள் பலியாகின்றன'' என்று கூறிய பிரதமர் திரு. ராஜீவ்காந்தி; ''இலங்கையின் இரு தரப்பினரையும் சந்திக்கவைக்க பாரதம் முயல்கிறது. இதனுல்

(5ம் பக்கம் பாரக்க)

தாவடி விமான தாக்குதல்:

## இருசிறுவரின் மரணங்களும் கொலை எனத் தீர்ப்பு!

(கா. போசநாதன்)

தாவடியில் நடந்த விமானக் குண்டுவீச்சு சம்பவத்தின் போது பலியான இரு சிறுவர்களின் மரணவிசாரணை முடிவில் கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

யாழ் நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நேற்றுக்காலை மரணவிசாரணை நடைபெற்றது. பொலிஸ் சார்ஜன்ட் பிரமானந்தன் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

இச் சம்பவத்தில் தாவடியைச் சேர்ந்த எஸ் மயூரதன், மலைநாட்டைச் சேர்ந்த ஸ்ரீ. ராஜசேகரன் ஆகிய இரு சிறுவர்கள் பலியானனுர்கள்,

பேராசிரியர் என். சரவணபவானந்தன் பிரேதபரி

[5 ம் பக்கம் பார்க்க]

## இலவசமாக உணவுப் பொருட்கள்

[யாழ்ப்பாணம்]

நயினதீவு மக்களுக்கு இலவசமாக அரிசி, சீனி, மவு போன்ற உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

[ஐ]

## நயினதீவு படகுச்சேவை நடந்தது; 12 பேர் வந்தனர்

(யாழ்ப்பாணம்)

நயினதீவிலிருந்து படகுச் சேவை நேற்று மீண்டும் ஆரம்பமான போதிலும். ஒரு படகு மட்டுமே குறிகட்டுவான் துறைக்கு வந்தது.

இப்படகில் 12பிரயாணிகள் பிரயாணம் மேற்கொண்டனர்.

நயினதீவில் மூன்றுபடகுகள் மட்டுமே தற்போது நிற்பதாகவும், இதில் ஒருபடகுமட்டுமே நேற்று சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

[ஐ]

## ராணுவ சிப்பாய் தற்கொலை!

[வவனியா]

வவனியா ஈரற்பெரியகுளம் முகாமைச் சேர்ந்த ராணுவச் சிப்பாய் ஒருவர் மனவிரக்தியால்தற்கொலைசெய்துகொண்டார்!

சுனில் சாந்த [வயது 22] என்ற இந்த சிப்பாயின் மரணவிசாரணையை வவனியா மரணவிசாரணை அதிகாரி ஆர். வி. வில்வராஜா நடத்தினர்.

(5ம் பக்கம் பார்க்க)

18 மாதங்களில்

## மலையக மக்களும் நாடு கேட்பார்களாம்

(கொழும்பு)

''மலையகத்தில் என்ன நடந்தது என்பதுபற்றி அறிய பாசபட்சமற்ற ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும். சிங்களவர் ஒருவர்தான் இந்தக்குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட வேண்டுமென்று நான் சிபார்சு செய்யமாட்டேன். இனரீதியில் எவரையும் நியமிக்காமல் வெளிநாட்டவரை யாவது நியமிக்கவும்'' என்று அத்தனகலை எம். பி. திரு லக்ஷ்மன்ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் நேற்று கோரிக்கை விடுத்தார்

''சன்சோனிக் கமிஷன் நியமிக்கப்பட்டதால் சில உண்மைகள் வெளிவந்தன. திரு.

(5-ம் பக்கம் பார்க்க)

## தமிழர்களைத் திருப்பி அனுப்பவேண்டாம்!

### 51,000 சுவிஸ் பிரஜைகள் அரசிடம் கோரிக்கை!

[பேர்ன்]

சுவிஸ்சர்லாந்தில் அரசியல் புகலிடம் தேடித் தஞ்சமடைந்துள்ள தமிழர்கள் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் அவர்களது உயிருக்கு ஊறு ஏற்படுமானல், அவர்களது பிரச்னையை மனிதாபிமானத்தோடு அணுகவும், தொடர்ந்தும் அவர்களை சுவிற்சர்லாந்தில் வைத்திருக்கவும் கோரும் மகஜர் ஒன்று சுவிஸ் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

சுவிற்சர்லாந்தின் பிரபல பிரமுகர்கள் எழுதுபேர் தலைமையில் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட ஒரு இயக்கம் 51,000 பேர்களினது கையெழுத்துக்களுடன் மேற்படி மகஜரை அரசிடம் கையளித்துள்ளது.

அரசியல் புகலிடம் கோரியவர்களின் நாடுகளில் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் தீர்வு காணப்படும்வரை அவர்களை சுவிஸ் நாட்டில் இருக்க அனுமதிக்குமாறும் மேற்படி மகஜர் அரசினைக் கோரியுள்ளது.

இலங்கைத் தமிழர்கள், துருக்கியர்கள் உட்பட ஏறத்தாழ 10,000 பேர் இன்னும் அரசியல் புகலிட அந்தஸ்து வழங்கப்படாமல் சுவிற்சர்லாந்தில் இருக்கிருர்கள் என்பதுஇங்கு குறிப்பிடத்தக்கது.

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

படவரைஞரால் பாவிக்கப்பட்ட Drawing Board(2½X3½) அதற்கு உபயோகம் உள்ள வேறுபொருட்களும் விற்பனைக்குள்ளன. தொடர்பு: "GEMS", 44, காங்கேசன் துறை வீதி, கொக்குவில். (C 1070)

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெற்-சிவபுராணம், தேவாரம் மற்றும் திருமுறைகள். பஞ்சபுராணம், மற்றும் பல பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (C 1077

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு அருகாமையில்(பிரதான வீதி, மெத்தைவீட்டு வள.வு) ஒருபரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியவர் P. P தாமு மாஸ்டர் துன்னாலை தெற்கு, கரவெட்டி. (C 1075)

## தேவை

கதிரைகளுக்குக் குஷன் தைக்கக்கூடியவர்கள் தேவை. எண்ணிக்கை அடிப்படையில் அல்லது நாட் சம்பள அடிப்படையில் வேலை வழங்கப்படும் ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். M 35 மே/பா Dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி. [A 330]

## தவறிவிட்டது

அப்துல் சலாம் ஐயூப்கான் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 4-3-86 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 13/8, கமால் லேன், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C 1073]

## MATRIMONIAL

30 year old engineer with Ph. D in U. S A. having mars in the eigth house seeks professionally qualified beautiful girl from a Hindu Vellala family as marriage partner. contact immediately with horoscope and photograph Correspondence Treated Confidentially. Advt No: C 1078, C/o Eelanadu, Jaffna (C 1078)

## கருத்தரங்கு

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சன சமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், தனாதிகாரி ஆகியோர்களுக்கிடையிலான சன சமூக நிலையங்களின் அபிவிருத்தி என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்றினை வேலணைப் பிரிவு சனசமூக நிலையங்களின் அதிகாரி திரு. க. ஆரகுநாதன் நடத்தத் திட்டமிட்டுள்ளார். மேற்படி இக் கருத்தரங்கை நடத்துவதற்கு முன் எதிர்வரும்12ம் திகதியும் 26ம் திகதியும் வேலணைப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இப்பகுதியிலுள்ள அனைத்து சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர்களை வந்து சந்திக்குமாறு சனசமூக நிலையங்களின் மேற்பார்வை அதிகாரி கேட்டுள்ளார்.

## கிளிநொச்சி - கச்சேரி

# கேள்விகள் கோரும் அறிவித்தல்

கிளிநொச்சிக் கச்சேரித் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால், பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் அனுமதிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கிளிநொச்சிக் கச்சேரியின் கட்டிடத்திற்கு மேலதிகமான கட்டிட நிர்மாண வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. பதிவுக்காகத் தேவைப்படும் பதிவுத் தொகை மீளப் பெறக்கூடியதும் மீளப்பெற முடியாததுமான கேள்வி வைப்புத் தொகை இக் கட்டிட நிர்மாண வேலைக்குப் பின்வருமாறு அமையும்.

1. தேவைப்படும் பதிவுத் தொகை ரூ. 2,50,000/-
2. மீளப் பெறக்கூடிய வைப்புத்தொகை ரூ. 250/-
3. மீளளிக்கமுடியாத கொடுப்பனவுத் தொகை ரூ. 100/-

கேள்விகள் கோருவோர் கேள்விகளைச் சமர்ப்பிக்கும் பொழுது பின்வரும் நிபந்தனைகளை அவதானிக்குமாறு வேண்டப்படுகின்றனர்கள்.

(i) கேள்வி கேட்கும் தொகை ரூபா 2,50,000/-க்கு அல்லது அதற்கு மேலான தொகைக்குப் பதியப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மட்டுமே கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(ii) கேள்விகள் இதற்கெனத் தயாரிக்கப்பட்ட படிவங்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவற்றை மீளப் பெறக்கூடியதும், மீளப் பெற முடியாததுமான தொகையைக் காசுக் கட்டளை மூலம் அல்லது வங்கி உண்டியல் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். காசுக் கட்டளை அல்லது வங்கி உண்டியல் அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற முகவரிக்குப் பெறப்படல் வேண்டும்.

(iii) கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் அடைக்கப்பட்டு, மெழுகு சீல் வைக்கப்படுவதுடன், 26-3-1986ந் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முன்னதாக இவ்வலுவலகத்திற்குக் கிடைக்கும்படி அனுப்பப்படல் வேண்டும். அல்லது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும். கேள்விகளை உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **'கச்சேரிக் கட்டிடத்துக்கு மேலதிகமான கட்டிட நிர்மாண வேலைக்கான கேள்விகள்'** எனக் குறிப்பிட்டுத் தலைவர், திணைக்களக் கேள்விச் சபை, கச்சேரி, கிளிநொச்சி என்று முகவரியிடப்படல் வேண்டும்.

(iv) கேள்விகள் யாவும் கேள்வியாளர்களால் கையொப்பம் இடப்பட்டிருப்பதுடன், மாற்றங்கள், திருத்தங்கள் யாவும் உறுதிப் படுத்தப்பட்டும் இருத்தல் வேண்டும். கேள்விகளில் காட்டப்பட்ட விகிதங்கள் யாவும் இலக்கங்களிலும், சொற்களிலும் இருத்தல் வேண்டும்.

(v) கேள்விப் படிவங்கள் 18-03-1986ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும்.

(vi) கேள்விகள் 26-03-1986 பிற்பகல் 1-00 மணியளவில் இவ்வலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விதாரரோ அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகளோ கேள்விகள் திறக்கும் நேரத்தில் சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

(vii) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் அவருடைய கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவித்தல் கிடைத்த ஒரு வார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப் பணத்தைச் செலுத்துவதுடன் இதற்கான ஓர் ஒப்பந்தத்திற்கும் உட்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் அவரது கேள்வி ரத்துச் செய்யப்படலாம்.

(viii) எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது நிராகரிக்கவோ அல்லது எந்த ஒரு கேள்வியின் எந்த ஒரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளவோ அரசுக்கு உரிமை உண்டு.

(ix) கேள்விதாரர்கள் கேள்விகளைச் சமர்ப்பிக்கு முன்னர் வேலைகள் தொடர் ஆன வரைபடங்கள் மற்றும் விபரங்களை இவ்வலுவலகத்தில் பரிசீலனை செய்யும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.


(x) மேலதிக விபரங்களை வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் இவ்வலுவலக 'நிர்வாகக் கிளையில்' பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பம்:

**ந. ஜயநாதன்,**
தலைவர்.
திணைக்களக் கேள்விச் சபை,
கிளிநொச்சி கச்சேரி.
மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.
கிளிநொச்சி மாவட்டம்.

கச்சேரி,
கிளிநொச்சி.
1986-03-04.

(A 324)



வல்வெட்டித்துறை மக்கள்வங்கி முகாமையாளராக விருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. எஸ் சேனாதிராசாவின் சேவையைப் பாராட்டி வங்கி ஊழியர்களால் நடாத்தப்பட்ட பிரிவுபசார விழாவின்போது பிடிக்கப்பட்ட படம். படத்தில் இடமாற்றம் பெற்றுச் சென்ற முகாமையாளர் திரு எஸ் சேனாதிராஜா புதிய வல்வெட்டித்துறை மக்கள்வங்கி முகாமையாளர் திரு. வீ. கே. ஏரம்பமூர்த்தி ஆகியோருடன் வங்கி ஊழியர்கள் காணப்படுகின்றனர்.
(படம்:- ஏ. என். எஸ். திருச்செல்வம் புலோலி நிருபர்)

## பின்முற்றுக்கும் கட்டளையின் அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில்

உசன் மிருசுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை இரங்கநாதனின் மரணசாதனமில்லாச் சொத்து சம்பந்தமாக
காலஞ்சென்றவர்.
இரங்கநாதன் கைம்பெண் இராசபூபதி, உசன், மிருசுவில்.

சொத்துறுதிகள்
வ ழ. இல. 240/T

மனுதார்

எதிர்

1. இரங்கநாதன் இரவிசங்கர்,
2. இரங்கநாதன் ஜெயசங்கர், [பராயமற்றவர்]
3. இரங்கநாதன் பிரபாசங்கர், [பராயமற்றவர்]
4. இரங்கநாதன் மகள் இரவிச்சந்திரிகா, [பராயமற்றவர்]
5. இரங்கநாதன் சிவசங்கர் [பராயமற்றவர்]

2-5ம் பிரதிவாதிகள்பராயமற்றவர்கள் தங்கள் பாதுகாவலர் 1-ம் பிரதிவாதியாகிய இரங்கநாதன் இரவிசங்கர் மூலம்.

பிரதிவாதிகள்

மேலே சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மரணசாதனமிலலா சொத்து சம்பந்தமாக மேலே குறிக்கப்பட்ட இலக்க சொத்துறுதி சார் வழக்கு இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டு பின்முற்றுகும் கட்டளை பதியப்பட்டதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எனவே எவரேனும் இதில் அக்கறை உள்ளவர்கள் இந்த நீதிமன்றில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 24-ந் திகதி முற்பகல் 9-00 மணியளவில் மன்றில் சமூகம் கொடுத்து பின்முற்றுகும் கட்டளை ஏன் முற்றுன கட்டளை ஆக்கக்கூடாது என்பதற்கு ஏதேனும் காரணமிருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்கள்.

1986-ம் ஆண்டு மாசி மாதம் 17-ம் திகதி

மன்றின் கட்டளைப்படி
**ஆ. குணநாயகம்**
பதிவாளர்.

வரைவு
வீ. பொ. கார்த்திகேசு (J P U M.)
மனுதாரின் சட்டத்தரணி.
C 1071

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## தலைவர் ராஜினாமா

(பண்டத்தரிப்பு)

சங்கானை கிழக்கு பாவனையாளர் சங்கத் தலைவர் திரு வை செந்தில்நாதன் தமது தலைவர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இச்சங்கத்தில் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்ட உபவிதிகளுக்கு முரணான விதத்தில் கடைக்காரர்களும் வர்த்தகர்களும் அங்கத்துவம் வகிப்பதாகவும், நிர்வாகசபை அங்கத்தவர்களாக இவர்கள் இருந்து வருவதாகவும் இதனால் தமது கடமையை சரியாகவும், நீதியான முறையிலும் நிறைவேற்ற முடியாது இருப்பதாலேயே தமது பதவியை தாம் ராஜினாமாச் செய்வதாக திரு செந்தில்நாதன் வலிமேற்கு உதவி அரசாங்க அதிபருக்கு கடந்த வாரம் அனுப்பிவைத்துள்ள ராஜினாமாக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி
ப. நோ. கூ. சங்கம் பளை.

## வெற்றுப் பொருட்கள் கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி ப. நோ கூ. சங்கத்தில் பின்வரும் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு.

1. வெற்றுச்சாக்குகள் -4000.
2. வெற்றுபரல்கள்.
3. பாவித்த ரயர்.
4. கழிவு சீனி.
5. கழிவு மா.

கேள்விப் படிவங்கள் ரூபா 100/- மீளப்பெறும் வைப்பாகச் செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே செலுத்தியோர் இம்முறை செலுத்த வேண்டியதில்லை. வெற்றுச்சாக்குகளையும், பரல்களையும், ரயர்களையும் சங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம் விண்ணப்பங்கள்யாவும் 22-03-1986-க்கு முன் முத்திரையிடப்பட்ட பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேன்மூலையில் "வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

இங்ஙனம்,
**பொது முகாமையாளர்,**
பச்சிலைப்பள்ளி
ப. நோ. கூ. ச.
பளை.

4-3-86.

A 328

# டில்லியில் மீண்டும் உயர்மட்ட ஆலோசனை!

## தமிழக அமைச்சர் கலந்துகொண்டார்

(புதுடில்லி)
இலங்கை இனப் பிரச்னை சம்பந்தமாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மீண்டுமொரு உயர் மட்ட ஆலோசனையை நேற்று முன் தினம் நடத்தினுர்.

கவே இக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது.

இதனிடையே இலங்கையில் தமிழர் நிலை மோசமடைந்து வருவது குறித்து தமிழக மின் துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரனும் இந்தியப் பிரதமரைச் சந்தித்து ஆலோசனைகள் நடத்தியுள்ளார். 4 தினங்களாக புதுடில்லியில் தங்கியிருந்த திரு. ராமச்சந்திரன், பிரதமருடனுன தமது பேச்சுக்களைப் பற்றி எதுவும் கூற மறுத்து விட்டார். (செ)

## உலகச் செய்திகள்

கடந்த 4 நாட்களில் நடைபெற்ற 2 வது உயர் மட்ட ஆலோசனையில் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பி.ஆர் பஹத், வெளியுறவுச் செயலர் திரு ரெமேஷ் பண்டாரி, பிரதமரின் மேலதிகச் செயலர் திரு கரோன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு ஜே. என். டிக்ஸிற் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் நிலைமைகள் மோசமாகித் தமிழர்கள் கொல்லப்படுவது அதிகரித்து வருவது குறித்து விவாதிக்

## நமீபியாவுக்கு சுதந்திரமளிக்க தென்னுபிரிக்கா தயார்!

### மன்னிப்புச்சபை தென்னுபிரிக்காவைச் சாடுகிறது

(நியுயோர்க்]
தென்மேற்கு ஆபிரிக்க நாடான நபீபியாவுக்கும் சுதந்திரம் அளிக்கும் ஐ. நா. திட்டத்தை தென்னுபிரிக்கா அமுலாக்கத் தயாராயுள்ளது என்ற தென்னுபிரிக்க அறிவித்தல் எதிர்பார்த்தளவு வரவேற்பை அளிக்கவில்லை

இதனிடையே தென்னுபிரிக்க வெள்ளையரசு மனித உரிமைகளை மிகமோசமாக மீறிவருகிறது என சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ் சாட்டியுள்ளது.

தென்னுபிரிக்கப் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய ஜனுதிபதி போத்தா இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் மேற்படி ஐ. நா. பிரேரணையை தாம் அமுலாக்கத் தயாராயிருப்பதாகக் கூறினுர். ஆனுல் அதற்கு அங்கோலாவிலுள்ள கியூபத்துருப்புக்கள் வெளியேறவேண்டும் என அவர் நிபந்தனை விதித்துள்ளார்.

இதுபற்றி கருத்துத் தெரிவித்த ஐ. நா. சபைப் பேச்சாளர் இந்த அறிவித்தல் பற்றி தென்னுபிரிக்க அரசிடம் மேலதிக விளக்கம் கோரப்பட்டுள்ளது எனக் கூறினுர்.

திரு. போத்தா தமதுரையில் கடந்த வருடம் ஜுலை மாதம் பிறப்பிக்கப்பட்ட அவசரக் காலச்சட்டம் வெகு விரைவில் நீக்கப்படுமெனவும் உறுதியளித்தார். ஆயினும் தென்னுபிரிக்க எதிர்க்கட்சியினர் இதுமக்களைஏமாற்றும் ஒரு திட்டமாகும் எனக் கூறியுள்ளனர். ஏனெனில் சமஉரிமை கோரும் கறுப்பினமக்களைஒடுக்குவதற்காக வெள்ளையரசு புது சட்டங்களை இயற்றிவருகிறது.

நமீபியச் சுதந்திரம் பற்றிய தென்னுபிரிக்க அறிவித்தலை அமெரிக்கா மட்டும்ம வரவேற்றுள்ளது. நமீபியாவின் சுதந்திரத்திற்காக போராடும் 'சுவாப்போ' இயக்கம், நமீபியப் பிரச்னையும், அங்கோலாவிலுள்ள கியூபத் துருப்புக்களின் பிரச்னையும் இணைக்கப்படக்கூடாது எனக் கூறியுள்ளது.

நமீபியா சுதந்திரம் பற்றிய தென்னுபிரிக்க அறிவித்தல் வெகுவிரைவில் வெளிவரும் என 'ஈழநா[illegible]' நேற்றுத் தெரிவித்திருந்தது.

இதனிடையே சர்வதேச மன்னிப்புச்சபை (அம்னஸ்டி இன்டர் நேஷனல்) தென்னுபிரிக்காவில் சிறைக்கைதிகள் மிகவும் மோசமான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப் படுவதாகக் குற்றஞ் சாட்டியுள்ளது. இதுபற்றி இந்த ஸ்தாபனம் திரு. போத்தாவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கைதிகள் நீண்டகாலத்துக்கு விசாரணையின்றித் தடுத்து வைக்கப்படுவதாகவும், இம் முறைகேடுகளைத்தவிர்க்க அரசு சகல முயற்சிகளைமேற்கொள்ள வேண்டும்எனவும் வலியுறுத்தியுள்ளது (செ)

## பர்மாவில் பெரும் தீ

### பலகட்டிடங்கள் நாசம்

(ரங்கூன்)
பர்மியத் தலைநகரான ரங்கூன் நகரில் நேற்று முன்தினம் மூண்டபெரும் தீயினுல் நூற்றுக் கணக்கான கட்டிடங்கள் நாசமாகி யுள்ளன.

ஒருசிறு மூங்கில் வீட்டிலிருந்து ஆரம்பித்த தீ, வேகமாக வீசிய காற்றின் உதவியுடன் மிக விரைவாக அயலிடங்களுக்கும் பரவியது. இதனுல் சுமார் 18,000 மக்கள் தமது வீடுகளை விட்டுவெளியேறியுள்ளனர்.

இத்தீயினுல் ஏற்பட்டசேதம் 50 லட்சம் டாலருக்கும்மேலாகும் என அஞ்சப்படுகிறது. உயிரிழப்புகள் பற்றிய நிச்சயமான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

பார்மாவில் இப்போது கோடைக்காலம் என்பது குறிப்பிடத்தக்கது. [செ)

## பஹத் பேச்சின் எதிரொலி:

### இந்தியாமீது சபையில் குற்றச் சாட்டு!

[கொழும்பு]
''ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச்சபை முன்பாக இந்தியாவை நாம் ஏன் நிறுத்த முடியாது?'' என்று அகலவத்தை எம். பி. திரு. மெரில் காரியவாசம் பாராளுமன்றத்தில் நேற்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பஹத்தின் உரைகுறித்து இடம் பெற்ற விவாதத்தில் கேள்வி எழுப்பினுர்.

''இலங்கையால் இந்தியாவைத் தாக்கமுடியாது. அங்குள்ள தீவிரவாதிகளின் முகாம்களையும் அழிக்கமுடியாது. ஆனுல் இந்தியாவுக்கு எதிரான உலக அபிப்பிராயத்தை எம்மால் திரட்டமுடியும்'' என்று தெரிவித்த அவர் ''இந்தியா ஒருபெரிய நாடாக இருக்கலாம். ஆனுல் எமக்குப் பலமில்லை என்று இந்தியா நினைக்கமுடியாது. எமக்குள்ளேயே ஒரு சொந்தப்பலம் உள்ளது. தீவிரவாதிடனுன இந்தியாவின் தொடர்பு குறித்து ஒவ்வொரு இந்தியனும் வெட்கப்படவேண்டும். இதன் மூலம் மனிதகுலத்துக்கு இந்தியா பெரும் பாவத்தை செய்கிறது'' என்றுகூறினுர். [ய-பி]

## ''தேவை: நிதானம்''

### சபையில் 'சரத்'

[கொழும்பு]
''இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பஹத் இந்தியப் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகுறித்து நாம் குழப்பமோ, ஆத்திரமோ அடையாமல் நிதானத்துடன் நடக்க வேண்டும். இந்தியாவுடன் வார்த்தைமூலம் மோ[illegible] வோம் என்று அகலவத்தை எம். பி. கூறினுர். இப்படிக் கூறுவதன் மூலம் பிரச்னைகளை நாம் மேலும் சிக்கலாக்கக் கூடாது''

இவ்வாறு கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம பாராளுமன்றத்தில் நேற்று கூறினுர்.

''இந்தியாவுடன் நல்லுறவை வைத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் இந்தியாவின் உதவியைப் பயன்படுத்தித்தான் இந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டும். இந்தியாவுடன் இப்படி பேசுவதும் அதற்கு மறுப்பு தெரிவிப்பதும் வருடாந்த நிகழ்ச்சியாகிவிட்டது.

''இந்தப் பிரச்னையைப் பொறுப்பாக அணுகவேண்டும். அங்கத்தவர்கள் கூறியது போல நானும் பஹத்தின் கூற்றை ஏற்கமாட்டேன்'' என்றும் அவர் கூறினுர் (ய-பி)

## சுவீடிஷ் பிரதமர் கொலை:

### தகவல் தருவோருக்குச் சன்மானம்

ஸ்ரொக்ஹோம்)
சுவீடிஸ் பிரதமர் திரு. ஓலோப் பால்மேயைக் கொலை செய்தவர்களைப் பற்றிய தகவல்களைத் தருவோருக்கு 5 லட்சம் சுவீடிஸ் குரோனர்களை (சுமார் 70000 டாலர்) சன்மானமாக அளிக்க சுவீடிஸ் பொலிஸார் முன் வந்துள்ளனர்.

இதனிடையே திரு.பால்மேயைக் கொலை செய்தவர்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் சுவீடிஸ் பொலிஸார் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

திரு.பால்மேயின் உடம்பில் பாய்ந்திருந்த துப்பாக்கிச்சூட்டுச் சன்னம் இது வரை சுவீடன் நாட்டில் காணப்படாத வகையைச் சேர்ந்ததால் கொலையாளி ஒரு வெளிநாட்டவராய் இருக்கலாம் எனப் பொலிஸார் நம்புகின்றனர். அத்துடன் கொலையாளி இக்கலையில் தேர்ச்சபெற்ற ஒருவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ)

## ''மணிலா மாற்றம் போத்தாவுக்கு பாடம்''

### 'கேப் ரைம்ஸ்' கூறுகிறது

(கேப்ரவுண்)
பொதுஜன அபிப்பிராயத்தின் செல்வாக்கு பிலிப்பைன்ஸில் ஏற்படுத்தியுள்ள மாற்றம் அமெரிக்க வெளியுறவுத் துறைக்கொள்கையை வகுப்பவர்களுக்கு மட்டுமல்ல, வெளிநாட்டு உதவியில் தங்கியிருக்கும் தென்னுபிரிக்கா போன்ற நாடுகளுக்கு நல்லதொரு பாடமென 'கேப் டைப்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் பாடத்தை நிச்சயமாகப் பிரிட்டோரியா கற்றுக்கொள்ளவேண்டும்''என மேற்படி பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

அமெரிக்க ஜனுதிபதி திரு. ரெனைல்ட் றீகன் பிரிட்டோரியாவின் தீவிர ஆதரவாளரும் போஷகரும் என்பது தெரிந்ததே!

தென்னுபிரிக்காவுக்கு எதிரான நாடுகள் வர்த்தக ரீதியிலான தடையுத்தரவுகளைப் பிறப்பிக்க அமெரிக்க நாடாளுமன்றம் நிர்ப்பந்தம் கொண்டு வந்தபொழுதிலும் திரு றீகன் தொடர்ந்தும் தென்னுபிரிக்காவின் போத்தாவுக்கு உதவி வழங்கிவந்தமை விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸிலும் வங்கிக்கொள்ளை!

(பாரிஸ்)
பிரான்ஸில் பிரபல வங்கியொன்றினுள் புகுந்த சில துப்பாக்கி நபர்கள் பெருந்தொகையான பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர்

நேற்று அதிகாலை நடந்த

[7-ம் பக்கம் பார்க்க]

## முன்னுள் ஐ. நா. செயலர் 'நாஸி' குற்றவாளி?

### வன்மையாக மறுக்கிருர்!

(வியன்னு]
முன்னுள் ஐ. நா. சபையின் செயலாளர் நாயகமான கலாநிதி கேர்ட் வால்ட்ஹெய்ம், ஜேர்மனிய 'நாஸி' படைகளுடன் தான் தொடர்பு வைத்திருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை வன்மையாக மறுத்துள்ளார்.

இது பற்றி அவர் பத்திரிகையாளர்களிடையே பேசுகையில் இந்தக் குற்றச் சாட்டுக்கள் விஷமத்தனமான நோக்குடன் வெளியிட்டுள்ளதாகக் கூறினுர்.

உலக யூத காங்கிரஸ், திரு. வால்ட்ஹெய்ம் 2ம் உலகமகா யுத்தத்துக்கு முன்னரும், யுத்தத்தின் போதும் 'நாஸி' படைகளின் இளைஞர் பிரிவில் கடமையாற்றினுரென்றும் ஹிட்லரின் யூகோஸ்லாவியாப் படையெடுப்புக்கு முன்னின்று உழைத்தவர்களில் இவரும் ஒருவர் என்றும் குற்றஞ்சாட்டியிருந்தது அத்துடன் ஹிட்லரின் ஒழிப்புத் திட்டத்திற்கு ஆதரவாக இருந்தாரென்றும் உலக யூத காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இதற்குப் பதிலளித்த திரு வால்ட்ஹெய்ம் தான் எக்காலத்திலும் 'நாஸி' படைகளுடன் தொடர்பு வைத்திருக்கவில்லையென்றும், யூதருக்கெதிரான எந்தவொரு நடவடிக்கைகளிலும் தான் ஈடுபடவில்லை எனவும் கூறினுர்.

அவுஸ்திரிய நாட்டைச்சேர்ந்த திரு வால்ட்ஹெய்ம் மே மாதத்தில் நடைபெறவிருக்கும் அவுஸ்திரிய ஜனுதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார். இதனுல் அவரை அகௌரவப் படுத்தும் நோக்குடன் யூதர்களினுல் இந்தக் குற்றச் சாட்டுக்கள் வெளியிடப் பட்டிருக்கலாம் என அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

ஆயினும் இந்தக் குற்றச் சாட்டுககள் உண்மையாக நிரூபிக்கப்படுமானுல் அது சர்வதேச ரீதியில் நிச்சயமாகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். (செ)

## மணி வாக்கு

விவேகம் என்னும் காவலாளைக் கடவுளே, எனக்கு நீ வைத்துவிடுவாயானல் பின்பு வாழ்வில் வழுவேது?

—அருள்விருந்து

# நமது நோக்கு

## அம்பாள் விட்ட கண்ணீர்

"தாயின் வாஞ்சையை அறிகிறவன் தெய்வத்தின் சருணையை அறிகிறான். கருத்தரித்த நாள் முதல் காலமெல்லாம் தன் குழந்தைக்கென்றே வாழ்ந்திருப்பவள் தாய். அன்னை பராசக்தி உயிர்களைப் பரத்தினிடம் சேர்க்கும்வரை தனது கருணாகரக் கண்காணிப்பைச் செலுத்திவருகிறாள்".

அண்மையில் சமாதியான ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தா வழங்கிய அருளுரை இது.

உலகின் மிகப்பெரிய சக்தி பீடங்களில் ஒன்றென்று கொள்ளப்படும் நயினை நாகபூஷணி அம்பாள் கண்ணீர் விடுகிறாள் என்ற செய்தியை எங்கள் பத்திரிகையில் படித்தவர்களின் நெஞ்சம் எந்நிலையிலிருக்கும் என்பதை நாம் கற்பனைசெய்ய முடிகிறது.

கடந்த வருடம் மே 15ம் தேதி நயினாதீவுக்கு அண்மையில் 'குமுதினி' என்ற வள்ளத்தில் பயணஞ்செய்த சுமார் 48 அப்பாவித் தமிழர் கம்பிகள், கத்திகள், கோடரிகளால் தாக்கப்பட்டனர். அதிற் பலர் மாண்டனர்.

ஒரு வருடம் முடிவடைய முன்னரே நீதவான் வீட்டைக் கொள்ளையடித்தது போல் அம்பாள் சந்நிதானத்தை அவமதித்து, ஆலயத்தின் தேர், சப்பரம், சகடை, மடம் எரிக்கப்பட்டதுடன் அம்பாளின் விலைமதிக்க முடியாத நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

கோயிற் பிரகாரத்திற்கப்பால் நான்குபேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். ஆயிரக்கணக்கில் மக்கள் தமிழர்கள், முஸ்லிம்கள் அகதிகளாகினர். பல வீடுகள், கடைகள் தீ வைக்கப்பட்டன. அங்கிருந்த நகைகள், பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

நகைகளைக் கொள்ளையடித்த பின் வீட்டுக்காரரை அந்த இடத்தில்துடிதுடிக்கச் சுட்ட செய்தி இந்தக்கொடுமைகளின் சிகரம்.

இந்தச் செய்தியைப் படித்தவர்கள் யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலைமை எவ்வளவு மோசமானாலும் கடந்த திங்களும் தொடர்ந்து செவ்வாயும் நடந்த அக்கிரமங்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான கடற் போரின் தொடக்கம் என்பதை மறக்கலாகாது. தெய்வ நிந்தனை என்ன செய்யும்? கொலையே தொழிலாகக் கொண்ட காடையர் கூட்டத்துக்கு செக்கென்ன சிவலிங்கமென்ன?

இதுவே 'நாகடீப' என்ற உணர்விருந்தாலும் இந்துக்கள் கோயில்களை எரிப்பதில் இன்பம் காணும் இலங்கை ராணுவம் போத்துக்கேயரிடம் போட்டிபோடுகின்றது.

நயினையில் வீற்றிருக்கும் அம்பாள் உலகமாதாவென்பதை நாமொருபோதும் மறந்ததில்லை. அவளுடைய அநுக்கிரகம் இல்லாது எந்த ஒரு தொழிலும் வெற்றியடையாது.

வடபகுதியில் வெடித்த கடற்கண்ணி பற்றி பாராளுமன்றத்தில் வியாக்கியானம் செய்த அமைச்சர் லலித் "தீவிரவாதிகள் இவ்வளவு விரைவாக அதனைப் பயன்படுத்துவார்களென்று எண்ணவில்லை" என்ற விளக்கம் அளித்திருக்கிறார்.

கடற்படைக்கு உண்டான சேதமே இன்றைய தாக்குதலுக்குக் காரணம்; தீவிரவாதிகள் கடற்படையினரைக் கொல்கின்றனர். உண்மையான கடற்படையினரென்றால் தீவிரவாதிகளைத் தேடிச் சென்று அவர்களையே கொல்வார்கள்.

பொது மக்களைக் கொல்ல கொள்ளையடிக்க, கோயிலை அழிக்கவந்தவர்கள் சறுப்புச் சட்டை காடையர்கள் என்பது பகிரங்க ரகசியம்.

1983ல் இத்தகைய கூட்டத்தினர் முடித்த கொலை நாடகம் சர்வதேச அரங்கில் தக்க கண்டனம் பெற்றிருந்தது.

இன்று நடைபெறும் நாடகம், காலம் இடம் என்ற மாற்றங்களைக் கொண்டது. நடிசர்கள் அதே கூட்டம்: என்பது அம்பலமாகிவிட்டது

நயினாதீவை மீண்டும் நாடிவந்த இந்த கறுப்புச் சட்டைக் கூட்டம் நாட்டுக்கு விமோசனம் கிடைக்கும் வரைக்கும் தினசரி துக்கம் என்பதைக் குறிக்கின்றது.

பயங்கரவாதத்தை ஒழிக்கத் திட்டமிட்டுவந்திருக்கும் இக் கூட்டத்தினர் பிலிப்பைன்ஸில் 20 வருட ஆட்சி எவ்வாறிருந்திருக்கும் என்பதை விளக்கும் தன்மையர்.

இன்று உலகமே குதூகலிக்கும் வண்ணம் பிலிப்பைன்ஸ் மக்களுக்கு விமோசனம் கிட்டியிருக்கிறது; இதுதான் தென்கிழக்காசியாவில் என்றால் தெற்காசியாவில் ஒரு பௌத்த நாட்டின் மக்கள் ஒரு தாய் பிள்ளைகள் இவ்வித குரோதத்தில் ஓயாது திளைப்பதானால், அம்பாள் கண்ணீர் விடுவதைவிட வேறென்ன செய்யமுடியும்?

ஏழை அழுத கண்ணீர் வேறு, ஏழைபங்காளன் அருளைத் தேடித் தரும் அம்பாள் விடும் கண்ணீர் வேறு; இது கூரியவாளிலும் மிக்க சக்தி வாய்ந்தது. விரைவில் விமோசனம்? இருந்து பார்ப்போம்

## பஹுத்தின் பேச்சின் எதிரொலி:

# இலங்கை-இந்திய உறவை கடுமையாகப் பாதிக்கும்

### பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பஹுத்தின் சமீபத்திய இலங்கைபற்றிய அறிக்கை இருநாடுகளுக்கிடையே இருந்துவரும் நல்லுறவைபாதிக்கும் என்று பதில் வெளிவிவகார அமைச்சர் திரு. டிரோன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கூறினார்.

இந்திய அமைச்சரின் உரை இலங்கைப் பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

திரு பெர்னாண்டோதொடர்ந்து பேசுகையில் இந்திய அமைச்சரின் உரை சம்பந்தமாக பாரதப் பிரதமர்வெளியிட்ட அறிக்கை மிக முக்கியமானது என்றுகூறி அதற்குப் பதிலாக இலங்கை அரசுவெளியிட்ட அறிக்கையையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

"1983ம் ஆண்டுமுதல்தமிழ்நாட்டிலுள்ள தீவிரவாதமுகாம்களை மூடிவிடுமாறு இலங்கை அரசு விடுத்த வேண்டுதலை இந்திய அரசு கவனத்திற்கு எடுக்கவில்லை. தீவிரவாதிகள் தமிழ்நாட்டில் தொடர்ந்தும் பலசலுகைகளை அனுபவித்த வண்ணம் இருக்கிறார்கள். இதனால் இலங்கை - இந்திய நல்லுறவுக்கு பாதிப்பு ஏற்படலாம் இலங்கை அரசு இனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வு என்ற கருத்தை தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளது. இந்தப் பிரச்னை தொடர்பாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியுடன் தொடர்ந்து சினேகபூர்வமான முறையில் தொடர்புகொண்டு செயற்படுவார் என்றும் பிரதி அமைச்சர் திரு டிரோன் பெர்னாண்டோ கூறினார்.

அகலவத்தை தொகுதி உறுப்பினர் திரு. பெரில்காரியவாசம் விவாதத்தை ஆரம்பித்து வைத்து பேசுகையில், "இலங்கை போன்றஒருசுதந்திர நாட்டின் மீது இவ்வறிக்கையில் பொறுப்பற்ற முறையில் பாரதூரமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. எனவே இதனையிட்டு நாம் மௌனமாக இருக்கமுடியாது. திரு. ராஜீவ் காந்தி போன்ற தலைவர்கள் பயங்கரவாதத்திற்கு எதிராக முன்புபேசியிருக்கிறார்கள். இப்பிரச்னைக்கு தீர்வுகாண அவர் போன்ற தலைவர்கள் தரும் உதவிக்காக அவர்கள் மீது பெரும் மதிப்பு கொள்வோம்" என்று கூறினார்.

அரணாயக்காதொகுதி எம்.பி. திரு. வசந்த உதயரத்ன பேசுகையில் இலங்கையில் இடம் பெற்றுவரும் பயங்கரவாதத்திற்கான முழுப் பொறுப்பையும் தமிழ்நாடு பெறுப்பேற்க வேண்டும் என்று குற்றம்சாட்டினார்.

விவசாய அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா பேசுகையில் இலங்கை விடுக்குள்ள பதில் அறிக்கைக்கு இந்தியாவிலுள்ள பொறுப்புள்ள அரசியல் வாதிகளிடம் இருந்து பதிலை எதிர்பார்ப்பதாகச் சொன்னார்.



# பெரியரிற் பெரியர்!

## பேராசிரியர் அ. சின்னத்தம்பி

மருத்துவத் துறையிற் கொடி கட்டிப் பறந்தவரான பேராசிரியர் சின்னத்தம்பியைப் பெற்றெடுத்த அப்பாக்குட்டி. தெய்வானைப்பிள்ளை தம்பதிகள் இப்படி ஒரு உத்தமரைப் பெற்றெடுக்க என்ன புண்ணியஞ் செய்தனரோ. மானிப்பாய் தவஞ் செய்தது. இன்னும் பல்லாண்டு நற்பணி புரிவார் என்று எதிர்பார்த்திருந்த நமக்கு, பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் மறைவு பழைய சம்பவங்களை நினைவுகூர வைக்கின்றது.

இளமையில் நன்கு கற்று வைத்திய கலாநிதியானபோதும் ஏழைகளின் கல்வியிற்கவனம் செலுத்தியவர் பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள். முந்தல், குசலைப் பாடசாலைகளும் ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி வித்தியாசாலையும் உருவாவதற்கு முன்னின்று உழைத்தவர் இவர் சைவ சமய ஸ்தாபனங்களுக்கு பெரு நிதி வழங்கினார்.

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்க வளர்ச்சிக்கு உழைத்தவர் தான் ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர் என்பதை மறந்து சாதாரண பிரஜையாகத் தொண்டு செய்தவர்.

கொழும்பு பேராதனைப் பல்கலைக் கழகங்களில் மருத்துவப் பேராசிரியராக இருந்த காலத்தில் கற்றவர்களே பெயர் பெற்ற டாக்டர்களாக உலகின் பல பாகங்களிலும் இன்றும் தொண்டுசெய்துவருகின்றார்கள்.

மகப் பேற்று மருத்துவத்தில் உயர் சிறப்பைப் பெற்ற காரணத்தினால், "பேராசிரியர் டாக்குத்தர் சின்னத்தம்பிக்குக் காட்டினால் தான்சுகப் பிரசவம் ஏற்படும்" என்று நம்பிய கர்ப்பவதிகளே அநேகராயிருந்தார்கள். நீண்டகாலம் மகப்பேறின்றி இருந்தவர்கள் பேராசிரியர் அவர்களது ஆலோசனையைப் பெற்று அதற்கு மேல் மகப் பேற்றை அடைந்திருக்கிறார்கள். அப்படியானவர்களுக்குப் பேராசிரியர் அவர்கள் கண் கண்ட தெய்வம். ஓய்வுபெற்ற காலத்திலும் தான் பிறந்த மண்ணுக்க சேவை செய்ய வேண்டும் என்று எண்ணியவர் எண்ணியபடி நடந்தவர்.

### அ. பஞ்சாட்சரம்

வயசு 70 க்கு மேற் பட்டபோதிலும் அறுவைச் சிசிச்சை செய்வதில் பின்னிற்க மாட்டார்.

தனியார் வைத்திய சாலையில் கடமை புரியும் அநுபவம் வாய்த்த தாதியிடம் "சின்னத்தம்பி ஐயாவுக்கு கைநடுங்குகிறது எப்படி இந்த அறுவைகளை செய்து முடிக்கிறார்" என்றேன்.

"ஐயாவுக்கு வேலை இல்லாத நேரத்தில் கை நடுக்கம் உண்டு தான் அவருக்குரிய கோட்டையும் போட்டு பொத்தானையும் பூட்டி விடுவோம். சத்திர சிகிச்சைக்குரிய ஆயுதத்தைத் தொடுவார். சத்திர சிகிச்சை மண்டபத்தில் சிங்கக் குட்டியாக மாறிவிடுவார். நடுக்கம் பறந்து விடும். பெரிய வியப்பாக இருக்கும் அவரது உற்சாகம் அறுவை வெற்றிகரமாக முடியும். அந்த விஷயத்தில் அவருக்கு நிகர்அவரே என்றார் அநுபவம் வாய்ந்த அந்தத் தாதிப் பெண் மணியார்.

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றம் சமய சேவையின் பொருட்டு நூல் ஒன்றை வெளியிட முனைவந்தது. பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் தக்ஷ காண்ட உரை விஷயத்தை அறிந்த பேராசியர் சின்னத்தம்பி அவர்கள் "வாய்ச்சுப் போச்சுது; பண்டிதமணியின் தக்ஷகாண்ட உரையை பேராதனை பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றம் அச்சிடலாம். அதற்குவேண்டியன செய்யலாம் என்று முன்வந்தார்.

2067 பாடல்களைக் கொண்ட தக்ஷகாண்டம் உரை நூல் வெளியீட்டுவிழா பேராதனைப் பல்கலைக்கழக கலைமண்டபத்தில் 25-1-1967 புதன்கிழமை தமிழ்த்துறைத் தலைவராயிருந்த பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள் தலைமையில் நடந்தது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இவ் விழாவில் பேராசிரியர் ஆ வி. மயில்வாகனம் அவர்கள் பொன்னாடை போர்த்தியும் பேராசிரியர் அ சின்னத்தம்பி அவர்கள் பொற்கிழி வழங்கியும் பண்டிதர் ஐயாவைக் கௌரவித்தார்கள் தக்ஷகாண்டம் உரையில் யானைமீது ஏற்றப்பட்டு நகர் வலம் வந்த அந்தக் காட்சியை எண்ணும்பொழுது பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஜெய்குமார் ஸ்ரீரங்கநாதன் நீதிமன்றத்தில் ஆஜராவார்கள்

(கொழும்பு)

கொழும்பு நகரில் குண்டொன்றினை வெடிக்க வைப்பதற்கு முயன்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களான ஜெய்குமார், ஸ்ரீரங்கநாதன் ஆகியோர் எதிர்வரும் 26-ம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்காக ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.


## ஏரம்பா! கரையேற்று

"மில்க்வைற்"றுத் தாபனத்தின் முன்வதியும்
ஏரம்பா!
"மில்க்வைற்"சோப் செய்வதுபோல்
மின்னவைப்பாய் - பல்வகையில்
துன்பக் கடலின்கண் வீழ்ந்து துடிக்கும் மமை
இன்றுகரை தூக்கியுடன் ஏற்று.

-கவியரசு முருகசூரியன்.

## 45-ம் நாள் நினைவஞ்சலி



**செல்வன்**
**சீ. குகானந்தன்**

அன்னையின் மடியில்:
24—07—1968

இறைவன் அடியில்:
21—01—1986

எங்கள் நெஞ்சம் மறவாத அன்புக் குகனே! இன்ப இருள் நீங்கும் வெண்ணிலவே! நீ மின்னுமல் முழங்காமல் தூர தேசம் சென்றனையோ!! மின்சார அரக்கன் உன் உயிரை நெடும்பயணம் மேற்கொள்ளச் செய்தானே! கதிகலங்கி நிற்கின்றோம் கண்ணே குகா!! நினைவுகள் தாம் எம் துணையோ?

06-03-86 வியாழக்கிழமை அதிகாலை வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து எமது அன்புச் செல்வத்தின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்து ஏகுமாறு இத்தால் தாழ்மையுடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்:
பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
அண்ணு, தம்பி, தங்கை,
மன்சூர், சந்திரன்.

இலந்தை கட்டி,
ஏழாலை கிழக்கு.
ஏழாலை. (C 1083)

## பெரியரிற் பெரியர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தக்ஷகாண்டம் உரைநூல் முகவுரையல பண்டிதா ஐயா அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள். "ஓங்கார மூர்த்தியாகிய விநாயகப்பெருமான், அந்தியற்புத அதிமதுரச் சுத்தச் செந்தமிழாகிய கந்தபுராணத்தின் கருவூலமான தக்ஷகாண்டத்துக்கு உரையெழுவதோர் எழுச்சியை உற்பத்திசெய்தும் அது முற்றுதற்கு வேண்டும் அநுகூலங்களை அநுக்கிரகத்தும், மூலமும் உரையும் அச்சில்வருதது கருதி 'அஞ்சலோம்புமதி' என்று கனம்பொருந்திய வைத்திய கலாநிதி பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்கள் மூலம் அபயம் அளித்தும் மதிப்புக்குரிய இலங்கைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்க வாயிலாக வெளியீடு செய்தருளியும் முகிழ்ந்த பெருங்கருணைத் திறத்தை மன முருகி வாழ்த்தி வணங்குவாம்."

"இப்பதியின் உயிர்நாடியாயமைந்தவர்கள், பேராசிரியரும் வைத்திய கலாநிதியும் ஆகிய திரு. அ. சின்னத்தம்பி அவர்கள் அவர்களின் வள்ளன்மை வான் சிறப்பைச் சேர்ந்தது"

சில ஆண்டுகளுக்குமுன் திருநெல்வேலிக்கு வரும்போது மூன்றுசில்லு வண்டியொன்றையும் கொண்டுவந்தார். பண்டிதமணி அவர்களே இந்த வண்டியில் இருந்தால் உங்களுக்குச் சுகமாக இருக்கும். உருட்டிச் செல்லலாம். நீங்கள் வைத்து உபயோகியுங்கள் என்று சொல்லிவிட்டு மீண்டார்கள். பேராசிரியரின் தளர்ச்சியை அவதானித்த பண்டிதர் ஐயா அவர்கள் "என்னிலும் பார்க்க டாக்குத்தருக்குத்தான் இந்தவண்டி இன்னும் கூடுதலாக உபயோகப்படலாம்" என்று ஹாஸ்ரமாகக் கூறினுர்கள்.

என்னைக் காணும் போதெல்லாம் "பண்டிதமணியைக் கொண்டு இன்னுமின்னும் எழுதுவியுங்கள் அவரது உயர்ந்த கருத்துக்கள் உலகமெல்லாம் பரவ வேண்டும்" என்று உற்சாகப்படுத்துவார்

கோடி கொடுத்தும்
குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடிபெறும்
என்பதை அவர்பால்
உணர முடிந்தது.

பேராசிரியர் சின்னத்தம்பி அவர்கள் சென்றதுறை மருத்துவத்துறையாயினும் ஏனைய சகல துறைகளையும் இரசிக்கும் பண்பு மிக்கவராயிருந்தார். அவர் பட்டங்கள் பலவற்றைப் பெற்றிருந்தாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அளித்த கலாநிதி என்ற கௌரவப் பட்டமே அதி முக்கியம் வாய்ந்தது. தமிழர்களுக்கு ஒரு தமிழ் பல்கலைக்கழகம் வேண்டும், யாழ்ப்பாணத்தில் ஒருபல்கலைக்கழகம் வேண்டுமென்று வாழ்நாள்முழுவதும் உழைத்தவர். அப்படியான ஒருவருக்கு அவர்பிறந்த மண்ணிலே அமைந்திருக்கும் பல்கலைக்கழகம்கௌரவ லாநிதிப் பட்டத்தை அளித்தமை விஷேடமானது, பெற்றவர்களும் கொடுத்தவர்களும் சரித்திர நாயகர்களாவார்கள்.

உடல் பொருள் ஆவி அனைத்தையும் பிறந்த மண்ணுக்கே அர்ப்பணித்துச் சென்ற பேராசிரியர் அப்பாக்குட்டி சின்னத்தம்பி அவர்கள் ஒரு பெரும் சான்றாண்மையாளராவர். அவர்கள் பெயரிற் பெரியவர். தான் எம் மனத்திரையில் தோன்றுகின்றார்கள்.

## 18 மாதங்களில்...

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

தொண்டமான் தோட்டப் பகுதிகளில் என்ன செய்கின்றார் என்பது குறித்து விசாரிக்க வேண்டும். மலையகத்தில் அசம்பாவிதம் ஏற்பட்டால் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள கித்துல்கல தோட்டத்தில் இருநூறு பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் 18 மாதங்களில் மலையகமக்களும் தமக்கென்று ஒரு 'தாய்நாடு வேண்டும் என்றும் கேட்பார்கள்" எனவும் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி கூறினர். (ய பி)

## தாவடி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சோதனை செய்தார்.

"மயூரதனின் சடலத்தை பிரேத பரிசோதனை செய்தேன். தலைவேறு உடல் வேறான நிலையில் இருந்தது. எனது அபிப்பிராயப்படி இவர் தலை வேறுக்கப்பட்டதனுல் இறந்திருக்கலாம், மலைநாட்டுச் சிறுவன் ஸ்ரீ. ராசசேகரனின் சடலத்தை பிரேதபரிசோதனை செய்தேன். எனது அபிப்பிராயப்படி காயங்களினுல் ஏற்பட்ட அதிர்ச்சியினுலும் இரத்தப்பெருக்கினுலும் இறந்திருக்கலாம். இவர் உடலில் காணப்பட்ட காயங்களிலிருந்து இவர் நின்ற இடத்தில் குண்டு வெடித்ததினுல் காயங்கள் ஏற்பட்டிருக்கலாம்"

இரு சிறுவர்களின் மரணங்களும் தனித் தனியே கொலை எனத் தீர்ப்பளித்த நீதவான் இச் சம்பவம் பற்றி விசாரணை செய்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். [க]

## 125 கிராம..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாளர்கள் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டிருந்தனராம். உதவி அரசாங்க அதிபர்கள் தமது பகுதியில் உள்ள கிராம சேவகர்களை மேற்படி கூட்டத்தில்கலந்துகொள்ளும்படி கேட்டிருந்தார்களாம் இதற்கிணங்க நேற்று முன் தினம் யாழ் அரசாங்க அதிபரைச் சந்தித்தார்கள். இந்தச்சந்திப்பில் கூறப்பட்டபடி சகல கிராமசேவையாளர்களும் நேற்றுக்காலை யாழ்.செயலகத்துக்குச் சென்று நிர்வாகக்கிளையில் கையொப்பமிட்ட பின்னர் கோட்டைக்குச் செல்வதற்காக செயலக பஸ்தரிப்பில் நின்றபோதே கடத்தப்பட்டனர்.

இவர்களைக் கடத்தியவர்கள் கிராம சேவையாளர்களின் கண்களைக் கட்டிவிட்டு வாகனங்களில் அவர்களை தொலை தூரம்கொண்டுசென்றனராம். பின்னர் குறிப்பிட்ட இடமொன்றில் அவர்களை இறக்கி ஆயுதத்தைக்காட்டியபடி "நீங்கள்எந்தச்சந்தர்ப்பத்தை முன்னிட்டும், எக்காரணம் கொண்டும் இனிமேல் எந்தவொரு இராணுவ முகாமுக்கும் செல்லக்கூடாது" என்று எச்சரிக்கை செய்தனராம்.

தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ இராணுவ முகாம்களுக்குச் செல்லக்கூடாது" என்றும் அப்படி யாராவது சென்றுவந்தால் எம்மால் தண்டிக்கப்படுவார்கள் என்றும் எச்சரிக்கை செய்தனராம்.

கிராமசேவையாளர்களை அழைத்துச் சென்றவர்கள் அவர்களை நல்லமுறையில் கவனித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை ஐந்துமணியளவில் வாகனங்களில் ஏற்றி வந்து நல்லூர்க் கந்தசுவாமி கோவிலடியில் இறக்கிவிட்டுச் சென்றனராம்.

கிராம சேவையாளர்களைக் கடத்திச்சென்று விடுதலை செய்தவர்கள் "தமிழீழ விடுதலை இயக்கத்தைச்(ரெலா) சேர்ந்தவர்கள் என்று உரிமை கோரப்பட்டுள்ளது. (ஐ)

## ராணுவ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விசாரணையில் சாட்சியமளித்த வவனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உபாலி விக்கிரமசிங்கா, நேற்றுமுன்தினம் காலை மேற்படி முகாமிலிருந்து சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்துள்ளதாகத் தகவல் வந்ததாகவும் தான் அங்கு சென்றபோது சாந்த இறந்துகிடக்கக்காணப்பட்டாரென்றும், கையில் இயந்திரத் துப்பாக்கியொன்று காணப்பட்டதாகவும்கூறினுர்

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## பாடசாலை விழா ஒத்திவைப்பு

[உடுவில்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற இருந்த பரிசளிப்புவிழா விளையாட்டு விழா, கலைவிழா ஆகியன பாதுகாப்புக்கருதி காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இக்கல்லூரியின் 75வது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கமும், ஆசிரியர் கழகமும் இவ் விழாவை ஒழுங்கு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## இருவர் கடத்தப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகக்கட்டிட மேற்பார்வையாளரான திரு. குமரையா இனந்தெரியாத நபர்களால் நேற்றுக்கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

யாழ். அஞ்சல் தொலை தொடர்பு பரிவர்த்தனை நிலைய வருமானப்பகுதி பொறுப்பாளரான திரு. நாகரட்னம் என்பவரும் நேற்றுக் கடத்திச்செல்லப்பட்டுள்ளார் அதேசமயம் மேற்படி நிலையத்திலிருந்த வருமானப்பகுதி தஸ்தாவேஜுகளும் இனந்தெரியாத நபர்களால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கடத்திச்செல்லப்பட்ட இருவரும் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படவில்லை. (மா)

## வாய்ப்பேச்சு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிறிது முன்னேற்றம் ஏற்பட்டது. மேலும் முன்னேற்றம் ஏற்படும் என்றும் நம்பிக்கை உள்ளது. அகதிகள் வருவது தான் பாரதத்துக்கு உடனடியாக கவலையளிக்கும் பிரசனை. கண்ணியமாகவும், பத்திரமாகவும் அகதிகள் திரும்புவதற்கு ஏற்ற நிலைமையை உருவாக்க வேண்டும். இலங்கைச்சம்பவங்களில் பாரதம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்ற இலங்கை அரசின் குற்றச்சாட்டை நாம் மறுக்கிறோம்" என்றும் தெரிவித்தார். (ச)

## இலங்கை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வில்லை என்றும் அண்மையில் புதிதாக அகதிகள் முகாம் எதுவும் அமைக்கப்படவில்லை என்றும் அகதிகள் பற்றிய முழுத்தகவல்களையும் தரும்படி தமிழ்நாட்டை தான் கேட்டுள்ளதாகவும் திரு நாராயணன் கூறினர்

"1983ல் இனக்கலவரம் ஏற்பட்டதிலிருந்து 1985 டிசம்பர் வரை மொத்தம் ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 28 அகதிகள் பாரதம்வந்துசேர்ந்துள்ளனர். 1985 மார்ச்சுக்கு முன்னதாக அகதிகட்கு நிவாரணம் அளித்தது பற்றிய கணக்குகள் தனித்தனியாக வைக்கப்படாததால் 1983-85 ஆண்டுகளில் அகதி நிவாரணத்துக்கு செலவிடப்பட்ட தொகையை பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை. எனினும் பாரதத்துக்குதிருப்பி அனுப்பப்பட்டவர்கட்கும் அதிகட்குமாக நிவாரணமளிக்க 1983-84ம் ஆண்டில் 68½ லட்சம் ரூபாவும் 1984 85ல் ஒருகோடியே 43 லட்சம் ரூபாயும் செலவிடப்பட்டது.

அகதி நிவாரண செலவு பற்றி 1985 பெப்ரவரி 4ம் திகதியிலிருந்து தனியாகஒருகணக்கு ஆரம்பிக்கப்பட்டது செப்ரம்பர் 85 வரை ஒருகோடியே 76 லட்சம் ரூபா செலவிடப்பட்டதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது" என்றும் திரு. நாராயணன் கூறினர். [ச]


### யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

### சகல கிளைக்குழுக்களின் வாக்காளர் அங்கத்தவர்கள் கவனத்திற்கு

31-12-1985ல் முடிவடைந்த வாக்காளர் பட்டியல்கள் அந்தந்த கிளையின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. பட்டியல்களில் தங்களுடைய பெயர்கள் விடப்பட்டிருந்தால், அல்லது பிழையாக பதியப்பட்டிருந்தால, அல்லது வாக்குப்போடத் தகுதியற்றவர்களின் பெயர்கள் அப்பட்டியல்களில் காணப்பட்டால், தங்களுடைய எவ்விதஆட்சேபனைகளையும், எழுத்துமூலம் இன்றிலிருந்து (06-03- 986) பத்து நாட்களுக்குள் சங்கக் காரியதரிசிக்கு அறிவிக்கவும். பத்து நாட்களுக்குப்பின் எழுப்பப்படும் ஆட்சேபனைகள் நிராகரிக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
காரியதரிசி,
A 336

### வீடியோ புளொசம்ஸ்

சிறந்த முறையில் வீடியோ படம் பிடிப்பதற்கும் கலர்ப்போட்டோ எடுப்பதற்கும் தரமான முறையில் பிலிம்சுருள் பிரிண்ட்செய்து பெற்றுக்கொள்வதற்கும் நாடுங்கள்:

வீடியோ புளொசம்ஸ்
எமது இன்றைய வெளியீடு

1. நான் அடிமை இல்லை (தரமான பிரதி) ரஜனி. ஸ்ரீதேவி
2. மனக்கணக்கு (தரமான பிரதி) விஜயகாந். கமலஹாசன், ராஜேஸ், ராதா, அம்பிகா,
3. காகித ஓடம் (V. G. P.) நளினி, பிரசாத்
4. குங்குமப் பொட்டு (தரமான பிரதி) ஜெய்சங்கர், ஜீவிதா, சரிகா

வீடியோ புளொசம்ஸ்
30, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

த வீடியோ புளொசம்ஸ்
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
(அற்லஸ் இன்ஸ்ரிரியூட் அருகில்)

C-1085

### கடைசிநேர வரிவிளம்பரம்

### தேவை

கணவன் மனைவி மட்டும் உள்ள வெள்ளவத்தை வீட்டிற்கு பெண் உதவியாளர் 45-50 வயதிற்குட்பட்டவராக தேவை சம்பளம் நேரில் பேசலாம். விளம்பர இல C 1080 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்
C-1080

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30,
விஜயகாந்த்—ஜெய்சங்கர்
**இது எங்கள் பூமி**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 6-30
கல்யாணகுமார்-தேவிகா
நடித்த
**நெஞ்சில் ஓர் ஆலயம்**
புதிய பிரதி

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதா-சுரேஸ்
நடித்த
**ஆனந்த ராகம்**
(புதிய பிரதி கலர்)

● மீன்பிடித்தடையின் எதிரொலி

# யாழ்.நகரில் இரண்டு லட்சம் நுகர்வோர் பாதிப்பு!

# பரவலாக ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த முஸ்தீபு!

—கா. யோகநாதன்—

''கடற்றொழிலை நம்பி குருநகரில் மட்டும் 5000 குடும்பங்கள் வாழ்கின்றார்கள். மீன் பிடிப்பது மட்டுமன்றி கருவாடு,றால் ஏற்றுமதி; கடல் உணவுத் தொழிற்சாலை; ஐஸ் தொழிற்சாலை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களும் இதில் அடங்குவார்கள். கடல் வலயச் சட்டத்தினால் இக்குடும்பங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இது தவிர இச் சட்டத்தினால் யாழ்நகரில் மட்டும் சுமார் 2 லட்சம் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர்''

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்தி சங்க முகாமையாளர் திரு.சூரிடெமியல் என்னிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சட்டத்தினால் குருநகர், மயிலிட்டி, வல்வெட்டித்துறை மாதகல், தாளையடி பருத்தித்துறை பகுதிகளைச் சேர்ந்த ஆழ்கடலில் மீன்பிடிப்போர் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

''வழக்கமாக குருநகரிலிருந்து மீன்பிடிப்பதற்கு எத்தனை படகுகள் செல்லும்?''

என்று கேட்டபோது வழக்கமாக 350 படகுகள் செல்லுமென்றும் தற்போது எதுவும் செல்வதில்லையென்றும் கூறினார்.

சின்னக்கடை மீன் சந்தையில் மீன்வந்திருக்கிறதே என்று கேட்டபோது அதெல்லாம் கரைப்பகுதியில் வலைவீசிப்பிடித்ததென்றார்.

''அறக்குளா,பாரை போன்ற பெரிய மீன்களும் வந்திருக்கிறதே'' என்றேன்.

''வழக்கமாக படகுகளில் இரண்டு கிழமைக்கு முன்னர் தூரத்திலுள்ள தீவுகளுக்குச் செல்வார்கள். நெடுந்தீவு, கச்சதீவுக்கு படகில் மீன் பிடிக்கச் சென்றவர்களுக்கு இந்தக் கடல் வலயச் சட்டம்பற்றி தெரியாது. அவற்றில் சிலபடகுகள் குருநகருக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றன. அந்தப் படகுகளில் வந்தவைதான் இந்தப் பெரியமீன்கள்''

''இன்னமும் படகுகள் வர இருக்கிறதா?''

''கச்சதீவிலிருந்து இரண்டொருபடகுகள்வரவேண்டும். நெடுந்தீவிலிருந்தும் 15 படகுகள் வரவேண்டும். அநேகமா இந்த வெள்ளிக்கிழமைக்கு முன்னால் எல்லாப் படகுகளும் வந்துவிடும்''

''அதன்பின் பெரிய மீன்கள் கிடைக்காது''

''பெரிய மீன்கள் மட்டுமல்ல மீன்களுக்கேபெரும் தட்டுப்பாடு ஏற்படும் இதனால் வியாபாரிகள் நுகர்வோர் மத்தியில் போட்டியேற்பட்டு விலையும் அதிகரிப்பதைத் தவிர்க்க முடியாது''

''கடற்றொழிலாளருக்கு அரசு உணவு முத்திரை வழங்கப்போவதாக கூறப்படுகிறதே''

''அதனால் கஷ்டம் தீராது, இப்படி 84ம் ஆண்டு முதல் வழங்கிவருகிறார்கள். குடும்பத்தில் ஒருவருக்கு மாதம்40ரூபா வீதம் உணவு முத்திரை கிடைத்தது.இதில் அவர்கள் உணவுப்பொருட்களை வாங்கிக் கொள்ளலாம்.2பேர் கொண்ட குடும்பமானால்மாதம் 80 ரூபா கிடைக்கும். இதில் வாழ முடியாது,



''கூடத் தருமாறு கேட்கவில்லையா?''

''அதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆலோசிப்பதாக அறிகிறோம். 5 பேருக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு 300 ரூபாவும், 7 பேருக்கு மேற்மேற்பட்ட குடும்பங்களுக்கு 500 ரூபாவும் உடனடியாக வழங்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாக அறிகிறோம்''

''மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்படுமா?''

''கடற்றொழிலாளர் தொழிலுக்கு செல்லாவிடில் நிச்சயம் தட்டுப்பாடு ஏற்படும். இரண்டு மூன்று நாட்களுக்கு மீன்கள் கிடைக்கும். அதன் பின்தட்டுப்பாடு ஏற்படப் போகிறது. இதனால் விலையும் அதிகரிக்கும். கடற்றொழிலாளர் மட்டுமல்ல நுகர்வோரும் பாதிக்கப்படுவார்கள''

''மீன் தட்டுப் ாடு ஏற்பட்டால் கருவாட்டைப்பாவிக்க முடியாதா?''

''கருவாட்டை சேகரித்து ஏற்றுமதி செய்வது வழக்கம். மீன் தட்டுப்பாடு ஏற்பட்டால் கருவாட்டை மகாஞ்சக் காலத்திற்கு இங்கு கொடுக்க நேரிடும். அதன் பின் கருவாட்டுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும்.தற்போது தீவுப்பகுதியிலுள்ள மீன்தூள் தொழிற்சாலைக்கும் மூலப்பொருள் வழங்கி வருகிறோம். இதனால் அத்தொழிற்சாலையும் அதனை நம்பியிருக்கும் கால்நடை உணவுத்தொழிற்சாலைக்கும் பாதிப்பேற்படும். கடல் உணவுத் தொழிற்சாலைகளுக்கும் பாதிப்பேற்படும்''

''இங்கு டின் மீன் விற்பனை எப்படியிருக்கிறது,''

இங்கு எவரும் டின்மீன் இறக்குமதி செய்வதில்லை. கொழும்பிலுள்ள கம்பனிகள் தான் இறக்குமதி செய்கின்றன. அவை இங்குள்ள கடைகளுக்கு விற்பனைக்கு வருகின்றது. இங்கு தாராளமாக உடன்மீன் கிடைத்துவருவதால் டின்மீன் விற்பனை மிகக் குறைவு''

''இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்''

''விரைவில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடத்தப்பட இருக்கிறது. சட்டத்தை நீக்கும்வரை எதிர்ப்புத் தெரிவிக்கப்போகிறோம்''


## வவனியா விவசாயிகள் கவனத்துக்கு!

[வவனியா]

வவனியா மாவட்டத்தில் கடந்த காலங்களில் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக விவசாயக் கடன்பெற்று, அக்கடனைக் கட்டாத விவசாயிகளுக்குப் புதிய ஒரு திட்டத்தின் கீழ் விவசாயக் கடன் வழங்கப் படவுள்ளது.

அதாவது முன்பு பெற்ற கடன் அதற்குரியவட்டி இரண்டையும் கணக்கிட்டு அதில் பத்தில் ஒரு தொகையினை வங்கிக்குச் செலுத்தவேண்டும். மிகுதித் தொகையினை வருட அடிப்படையில் ஏழு வருடங்களுக்குச் செலுத்தப்படும் என கடன்பெற்றவர் உறுதியளித்தால் கடன் வழங்கப்படும் என வங்கி அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

மேலதிக விபரங்களை வவனியா மக்கள் வங்கி முகாமையாளருடன் அல்லது தமிழ் பிரிவு கூட்டுறவு சமாஜத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் கூறினார்.



கடந்த வாரம் மன்னாரில் நிகழ்ந்த கண்ணி வெடிச்சம்பவத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட பதில் தாக்குதலின்போது படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்பத்திரிக்கு அவசர சிகிச்சைக்காக வந்த நான்கு பெண்மணிகள்: பாத்திமா பீபீ [14], கமால் பாஷ்யா [35], பதுர்நிஷா [12], ஆலா அந்தோனியா [34].


# LANKA CEMENT LIMITED

## KANKESANTHURAI

## ஏல விற்பனை

1986-03-09 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிமுதல் 12-00 மணிவரை பாவிக்சப்பட்ட துண்டுக் கம்பிகள், முறுக்குக் கம்பிகள் ''ஆங்கில் அயன்'' எச். ஐ. வடிவ உருக்குத் திராந்திகள் என்பன லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் 1986-03-08ம் திகதி சனிக்கிழமை தொழிற்சாலைவளவில் பார்வையிடலாம்.
பொருட்களின்விலையின் 3ம் கூற்று முடிவடைந்தவுடன் முழுத்தொகையின் 1/3 பகுதிப் பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு, மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்படவேண்டும்.

பொருட்கள் பகுதி பகுதியாகக் கொள்வனவு செய்வோர் கூறப்பட்ட திகதியான 9ம் திகதி மார்ச் 1986 இல் இருந்து 02 நாட்களுக்குள்ளும் முழுக் கூறுகளும் ஒன்றாகக் கொள்வனவு செய்வோர் மேற்படி கூறப்பட்ட திகதியில் இருந்து 5 நாட்களுக்குள்ளும் தொழிற்சாலை வளவில் இருந்து விற்கப்பட்ட பொருட்களை அகற்ற வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்.

லங்கா சீமெந்து லிமிடெட்,
காங்கேசன்துறை.
1986 - 03 - 04.

[A323)


## இன்றைய பலன்

மாதம்- மாசி
திகதி- 22 (6 - 3 - 1986)
கிழமை- வியாழன்
திதி- ஏகாதசி
பி. இ. வரை
நக்ஷத்திரம்- பூரார்டம்
மு. ப. வரை

மேடம்: அறவழியில் மனம் செல்லும். தாராள மனப்பான்மையின் மூலம பணம் செலவாகும். இளைய பிள்ளையால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

இடபம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும். அரசியல் வாதிகளாயின் மிகவும் நிதானத்துடன் நடந்து கொள்ளவும்.

மிதுனம்: நலன் தரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும். குடும்பத்தில் மிக்க மகிழ்ச்சியுண்டு.

கடகம்: செய்தொழில் சிரமம் தோன்றக்கூடும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம் நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரிவிடக்கூடும்.

சிங்கம்: மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமையாற்றும் இடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பிதாவழிச் சுகமும் உண்டு.

கன்னி: வணிகர்களாயின் வியாபார விருத்திக்கு இடமுண்டு. உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள். வெளியிடத்து தொடர்புகளும் பெருகும்.

துலாம்: தொழில் துறையில் நல்ல மாற்றங்கம் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நண்பராலும் நன்மை உண்டு.

விருச்சிகம்: மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும்.

தனுசு: தானிய நஷ்டத்துடன் உடல் நலம் பாதிக்கப்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கும். திடீர்ப் பிரயாணத்திற்கு இடமுண்டு.

மகரம்: அற்பவிடயத்திற்கு கூட ஆத்திரப்பட நேரும். நெருங்கிய நண்பர் ஒருவரை பகைத்துக் கொள்ள நேரும். நாவடக்கம் நன்று.

கும்பம்: எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படும் வாழ்க்கையில் கடன் தொல்லை அதிகரிக்கும். சகோதர வழியால் சஞ்சலமுண்டு.

[7ம் பக்கம் பார்க்க]

# வேலணை உதவி அரசாங்க அதிபரிடம் முறையீடு

(வேலணை)

நயினாதீவில் இருந்து கடலால் நீந்தித் தப்பி வந்தவர்கள் நேற்றுமுன்தினம்வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு வந்து படுகொலை தீவைப்புச் சம்பவங்களை உடனே தடுத்து நிறுத்தி நயினாதீவு மக்களையும் அங்குள்ளவர்களின் உடமைகளையும் காப்பாற்றுமாறு கேட்டுக் கொண்டனர்.

நேற்றுமுன்தினம் நடுஇரவு குறிக்காட்டுவான் துறைமுகப் பகுதிக்கு வந்த சீருடையினர் அங்கு பலத்த சோதனைகளை மேற்கொண்டு பலரையும் கைது செய்து கொண்டு சென்றுள்ளனராம்.

நயினாதீவு பகுதியையும் குறிக்காட்டுவான் துறைமுகப் பகுதிகளிலும் ஹெலிகொப்டர்கள் அடிக்கடி சுற்றிக் கொண்டிருக்கின்றன.

இச் சம்பவங்களையடுத்து தீவுப்பகுதிகளுக்கிடையில் சேவையாற்றும் படகுகளின் சேவைகள் அத்தனையும் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

இச்சம்பவத்தையிட்டு வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரமும், நிர்வாக அதிகாரி ஏ. ரி. அரியரெத்தினமும் யாழ். அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு நிலமையைத்தெளிவு படுத்தினர்.

## இன்றைய பலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மீனம்: அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். அறிஞர்களின் தொடர்புகளும் பெரும். பொருள் வரவுக்கும் இடமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## தவக்காலச் சிந்தனை



23-ம் நாள்

மனந்திரும்புங்கள், இதயத்தைப் புதிப்பித்துக் கொள்ளுங்கள்: பழைய நடத்தைகளை விட்டு விடுங்கள், இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள். இவைகள் தவக்காலத்தில் நாம் அடிக்கடி கேட்குப் வார்த்தைகள். இறைவனின் நன்மைத்தனத்திற்கு அளவே இல்லை. அவருடைய இரக்கம் நமக்கு என்றும் உள்ளது. அவருடைய கருணை கரையில்லாதது. பழைய ஏற்பாட்டில் கடவுள் தன் அன்பு மக்களுக்கு தன்னுடைய கருணையையும் இரக்கத்தையும், அன்பையும் பல வழிகளில் காண்பித்தார் ஆனால் அந்த மக்களே நன்மையே உருவான இறைவனின் வழி வகைகளை விட்டு விட்டு மனம் போனபோக்கில் வாழ்ந்தார்கள். இறைவனின் தூதுவர்கள் வழியாக இறைவாக்கினர் வழியாக அம் மக்களை மன மாற்றத்திற்கு அழைத்தார். ஆனால் மக்களோ இதயத்தைக் கடினமாக்கிக் கொண்டார்கள். புதிய ஏற்பாட்டிலும், இயேசுவின் புதுமைகளை, அருங்குறிகளை நன்கு அறிந்திருந்தார்கள். சிலர், கடின இதயத்தின் காரணமாக, அவரை அசுத்த ஆவியால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்று கூட சொன்னார்கள்.

இதயத்தைக் கடினப்படுத்தி வைத்துக்கொண்டு உண்மையைத் தெரிந்தும் தெரியாமல் இருப்பது மன மாற்றத்திற்கு இடையூறாக இருக்கிறது. இறைவனின் குரலை நாம் கேட்கவேண்டும். உள்ளத்தை இறுகப் பூட்டிவைக்காது, திறந்த உள்ளத்தை இறைவனுக்குக் காணிக்கையாக்குவதே சிறந்த மன மாற்றமாகும். கல்லான இதயத்தை எடுத்துவிட்டு கனிவுள்ள நெஞ்சத்துடன் வாழவேண்டும். இன்று அவரின் குரலுக்கு செவிமடுப்பீர்களாகில் இதயங்களைக் கடினப் படுத்திக் கொள்ளாதீர்கள்.

வண. எஸ். டேமியன்
அ. ம. தி.

## சைவ சேவா சங்க மகாசிவராத்திரி

(யாழ்ப்பாணம்)

வேலணை சைவசேவாசங்கத்தினர் மகா சிவராத்திரி விழாவை பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாடவுள்ளனர்.

சிவ. ஸ்ரீ கை. திருஞான சம்பந்தக்குருக்கள் தலைமையில் திருமுறை பாராயணமும் சொற்பொழிவுகளும் இடம் பெறும் திரு. நா. வீரசிங்கம் திரு. மு. திருஞானசம்பந்த பிள்ளை, திரு. வி. கேதாரநாதன், வித்துவான் சு. சிவசம்பு திரு. இ. ஜெகசோதி பண்டிதர் க. இராசையா சங்கீதபூசணம் பே, சந்திரசேகரம் திரு. பொ. கேதாரநாதன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்நான்குஜாமப்பூசைகளும் நடைபெறும். (ஐ)

## சாவகச்சேரியில்

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா சனிக்கிழமை மாலை சாயாரைட்சை பூசையுடன் ஆரம்பிக்கும் அம்பாளுக்கு நான்கு ஜாமப் பூசையும் நடைபெற்று காலை உதயத்தில் தீர்த்தோற்சவமும் உள் வீதித்திருவிழாவும் நடைபெறும். (ஐ)

## அரியாலையில்

அரியாலை மேற்கு ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய இளைஞர் கலாமன்றம் மகாசிவராத்திரியை முன்னிட்டு சிறுவர்கள் பங்கு மற்றும் நாட்டுக்கூத்து தாளலயநாடகம் மற்றும் இன்னிசை நிகழ்ச்சிகள் பலவற்றை மேற்படி நிலைய கலையரங்கில் நடாத்தவுள்ளனர்.

## வீரகத்தி விநாயகர் கும்பாபிஷேகம்

[வல்வெட்டித்துறை]

உடுப்பிட்டி இமையாணன் துவாளி வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றதைத் தொடர்ந்து அதன் 45 நாள் மண்டலாபிஷேகமும் இப்பொழுது சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இறுதிநாள் மண்டலாபிஷேகமும், நவோத்திர சகஸ்திர சங்காபிஷேகமும், விஷேட அலங்கார உற்சவமும் நாளை ஏழாம்திகதி இடம்பெற இருக்கிறது.

அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபைத் தலைவரும், வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருவுமான ஸ்ரீலஸ்ரீ சோ. தண்டபாணி தேசிகர் தலைமையில் இப்பெருவிழா நடைபெறுகின்றது. சுமார் ஐம்பது வருடங்களின் பின் கும்பாபிஷேகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## பெயர்ப்பலகை திரைநீக்கம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை றுமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் பெயர்ப் பலகை அண்மையில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் காங்கேசன் துறை கிராமசேவையாளர் திரு எஸ் கனகநாயகம் கலந்துகொண்டு பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்துவைத்தார்.

## புதிய நிர்வாகிகள்

(சுழிபுரம்)

பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் வைத்தியகலாநிதி செ. வைத்தியலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. இ. ஆறுமுகம் செயலாளர்: திரு. ப. சி. செல்வநாயகம் தனாதிகாரி: திரு. சி தியாகராசா, மற்றும் பல நிர்வாகசபைஉறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## அகதிகளுக்கு விநியோகம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கெகுஜனவிழிப்பு ஒன்றியத்தினரால் அகதிகளுக்குச் சேகரிக்கப்பட்ட ரூபா மூவாயிரத்திற்கு மேற்பட்ட பெறுமதியான அரிசி, மா, பருப்பு குழந்தைகளுக்கான பால்மா போன்ற உணவுப் பொருட்களை வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் இருக்கும் அகதிகளிடம் ஒப்படைத்தனர்.

வேலணை அகதிகள் முகாம் பொறுப்பாளர் திரு. என் தவன் அவர்கள் பொருட்களைக் கையேற்றுக்கொண்டார். மேற்படி ஒன்றியம் புங்குடு தீவில் அகதிகளாக வந்து குடியேறியுள்ள நான்கு குடும்பங்களையும் பொறுப்பேற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்,

## தையிட்டியில் விழிப்புக்குழு

[காங்கேசன்துறை]

தையிட்டி கலாவல்லி வாசிகசாலை நிர்வாகிகள் இக்கிராமத்தில் திருட்டு, கொள்ளை, பயமுறுத்தல், கசிப்பு விற்பனை உற்பத்தி, சட்டவிரோத மின் பாவனை போன்ற சமூகவிரோதச் செயல்களில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் முகமாக 5 பேரைக் கொண்ட விழிப்புக்குழுவொன்றை பொதுமக்களின ஆதரவுடன் அமைத்துள்ளனர். திரு. சு இரவீந்திரகுமரன், திரு. எம். பி. சிவகுமார் திரு. சா. பிரேமதாசன், திரு. பொ. சச்சிதானந்தம், திரு ம. சிறிதரன் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இக்குழு தங்களுடன் இணைந்து செயல்படுவதற்கு 20 பேர் கொண்ட கண்காணிப்புப் படையொன்றையும் அமைத்துள்ளது.

## பிரான்ஸ்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தில் பாரிஸ் நகருக்கண்மித்ததாகஉள்ள வங்கியில் புகுந்த 6 இளைஞர்கள் வங்கிக்குள் நின்ற 30 ஊழியர்களை பணயம் வைத்துள்ளனர் அதன்பின்னர் அவர்கள்வங்கி முகாமையாளரிடமிருந்து பணக் காப்பறைகளின் திறப்புக்களை எடுத்து சுமார் 4 மில்லியன் டொலர் பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

பாரிஸ் நகரப் பொலிஸார் இப்போது புலன் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (செ)

# புத்தூரில் விளையாட்டுப் போட்டி 15-ல் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் இம் மாதம் 15-ம் திகதி முதல் அடுத்தமாதம் 23-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இம்முறை உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், வலைப் பந்தாட்டம், எல்லே ஆகிய போட்டிகள் நடைபெறவிருப்பதாக, மேற்படிப் போட்டிகளின் நிர்வாகச் செயலாளரும், வலி கிழக்கு, கோப்பாய் பகுதிகளின் விளையாட்டுப் பொறுப்பதிகாரியுமான திருமதி ஏ. எவ். ஜே. ரூபசிங்கம் தெரிவித்தார்.

வலைப்பந்தாட்டம், இம் மாதம் 15-ம் திகதி முதல் 16-ம் திகதிவரை புத்தூர் வீனஸ் கழக மைதானத்தில் நடைபெறும். இப்போட்டியில் மொத்தம் ஏழு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

எல்லே, விளையாட்டுப் போட்டி இம்மாதம் 22-ம் திகதி தொடக்கம் 24-ம் திகதிவரை வீனஸ் கழகமைதானத்தில் நடைபெறும். இப் போட்டியில் மொத்தம்நான்கு கழகங்கள் பங்கு பற்றுகின்றன.

உதைபந்தாட்டம், அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 15-ம் திகதிவரை நடைபெறும். வீனஸ் கழக மைதானத்தில் நடைபெறும் இப் போட்டியில் மொத்தம் எட்டு விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றுகின்றன.

ஆண்-பெண் இருபிரிவினருக்கும் தனித்தனியாக நடாத்தப்படும் கரபந்தாட்டப் போட்டி அடுத்தமாதம் 22-ம், 23-ம் திகதிகளில் வீனஸ் கழக மைதானத்தில் நடைபெறும். இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் ஏழு கழகங்களும், பெண்கள் பிரிவில் நான்கு கழகங்களும் கலந்து கொள்கின்றன.

இவ்விளையாட்டுப் போட்டிகளின் தலைவராக கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு க. சபாபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். (வி)

## சிவநெறிக் கழக சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

கீரிமலை சிவநெறிக் கழகத்தினர் இம் மாதம் 8 ம் திகதி சனிக்கிழமை கீரிமலை நகுலேஸ்வரர் திருக்கோயில் மண்டபத்தில் சிவராத்திரி விழா நடத்தவுள்ளனர் இவ் விழாவில் இக் கழகத்தால் சமீபத்தில் நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படும்.

இலக்கண வித்தகர் திரு. இ. நமசிவாயம் தலைமையில் நிகழும் இவ்விழாவின் பகல் நிகழ்ச்சியில் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம்சிறப்புரைநிகழ்த்துவார். சட்டத்தரணி திரு ம. சிதம்பரநாதன் பரிசில்களைவழங்குவார்.

இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சிகளில் போட்டிகளில் பரிசுபெற்றவர்களின் பேச்சு பண்ணிசை என்பனவற்றோடு செல்வன் பா. மகாலிங்க சிவத்தின் கவிதையும் இடம்பெறும்.

பல அறிஞர்களின் சிறப்புரைகளைத் தொடர்ந்து திரு. வை. கணேசலிங்கம், திரு. இ. நமச்சிவாயம் ஆகியோரின் பண்ணிசையும் நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறும். (ப)

## சிவராத்திரி

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் பகவான் ஸ்ரீ சத்யசாயிசேவா நிலையத்தினர் நாளை மறுதினம் சிவராத்திரியை முன்னிட்டு பல நிகழ்ச்சிகளை நிலையத்தின் தியான மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

சனிக்கிழமை மாலை 5-50 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நிகழ்ச்சி நான்கு சாம பூஜைகளுடனும், மற்றும் பல்வேறு சமய நிகழ்ச்சிகளுடனும் நடைபெற்று ஞாயிறு காலை 6 மணிக்குவிபூதி பிரசாதம் வழங்கப்படுதலுடன் முடிவடையும்.


A/L விஞ்ஞான பிரிவு
போட்டிப் பரீட்சை
A/L 86 பரீட்சைக்கு உதவியானது
பல அரிய பரிசுகள் சான்றிதழ்கள்

காலம்: ஏப்ரல் 10க்கும் 25க்கும் இடையில்

பரீட்சை நிலையங்கள்:
யாழ்ப்பாணம், நெல்லியடி, அச்சுவேலி, தெல்லிப்பளை
ஆகிய இடங்களில் நடைபெறும்.

விண்ணப்பப் படிவங்கள் பெறும் இடங்கள்:

| | | |
|---|---|---|
| நியூ மாஸ்டர் | ... | யாழ்ப்பாணம் |
| யூனிவேசல் இன்சிரியூட் | ... | கந்தர்மடம் |
| பொண்ட் | ... | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| சயன்ஸ் அக்கடமி | ... | யாழ்ப்பாணம். |
| குகன் இன்சிரியூட் | ... | இடைக்காடு |
| மதி அக்கடமி [மகவம்] | ... | குரும்பசிட்டி |
| இளங்கோ | ... | நெல்லியடி |
| சயன்ஸ் அக்கடமி | ... | அச்சுவேலி |
| பொண்ட் இன்சிரியூட் | ... | சிறுதங்கேணி |
| திரு. நாகரட்னம் மாஸ்ரர் | ... | 3-ம்குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். |

31-3-86 வரை விண்ணப்பங்களை
திரு. சி. கணபதிப்பிள்ளை,
17/31, ஐயனார் கோவில் வீதி.
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

பரீட்சை முடிவுகள் மே மாதம்
அனுப்பிவைக்கப்படும்.

(A 331)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## துப்பாக்கிச்சூடு: 3 இளைஞர் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு பகுதியில் மோட்டார்சைக்கிளில் சென்று கொண்டிருந்த மூன்று இளைஞர்களை நோக்கி கொமோண்டோக்கள் நேற்று முன்தினம் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் மூவரும் பலியானார்கள். (ய-பி)

## "ஜனாதிபதி - தொண்டா உறவு குறித்து அச்சம் அடையவேண்டியுள்ளது!"

### பாராளுமன்றத்தில் லக்ஷ்மன்

(கொழும்பு)

"ஜனாதிபதிக்கும் அமைச்சர் தொண்டமானுக்குமிடையே உள்ள நெருங்கியஉறவுகுறித்து நாம் அச்சமடையவேண்டியுள்ளது எந்தவொரு அமைச்சரையும் விட திரு. தொண்டமான் முக்கிய ஒருவராகக் காணப்படுகிறார்" என்று அத்தனகல எம் பி. திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் நேற்றுக்கூறினார்.

சபை ஒத்திவைப்பு நேரத்தில் அண்மையில் இடம்பெற்ற மலையக சம்பவங்கள் குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போது அவர் மேலும் கூறியதாவது:

"இந்திரா, சாஸ்திரி, ராஜீவ் சாதிக்கமுடியாதவற்றை தொண்டா சாதித்துள்ளார். கடந்த வாரம்ஈழம் வானொலி சேவை கேட்டேன். ஈழம் வானொலிசேவை நன்றாக இருப்பதாக அனேக மக்கள் கருதுகிறார்கள். இதற்கான பயிற்சி எங்கே பெறப்பட்டது? மதுரையில் தான். மதுரை தொண்டமானின் மனைவியின் ஊர். இந்நிலையில் ஏன் திரு. தொண்டமானை வெளியேற்றாமல் இருக்கிறார்கள்?

"திரு. தொண்டமானின் சொல்லைத்தான்யாழ்ப்பாணம் பின்பற்றி வருகிறது அவர் மலையகத்துக்கு தனியான பாதுகாப்பும், ஆயுதமும் கேட்கிறார். "திரு. தொண்டமான் மகாவலி ஏ. பி. பகுதிகளில் 4,013 மலையகக் குடும்பங்களை குடியமர்த்தும்படி கேட்டிருக்கிறார் இவர்கள்ஒரே இடத்தில் குடியமர்த்தப்படக்கூடாது. பரந்த அடிப்படையில் குடியமர்த்த வேண்டும்" என்று கூறினார். (ய-பி)

## வாடகைக்கு விடப்படும் வீடியோ பிரதிக்கு ரூ. 2 வரி

### 'புளட்' அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வாடகைக்கு விடப்படும் வீடியோ படப்பிரதிகள் ஒவ்வொன்றுக்கும் மேலதிக வரியாக இரண்டு ரூபா விதித்துள்ளதாகவும் இச்செயற்பாட்டுக்கு சகலரினதும் ஒத்துழைப்பை வேண்டுவதாகவும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (புளட்) வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம்கூர்மையடைந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் விடுதலை அமைப்புக்கள் பல்தரப்பட்ட தடைகளை தாண்டி முன்னேற வேண்டிய சூழ்நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தடைகளில் முதன்மை பெற்று விளங்குவது பொருளாதார பலமின்மையாகும். இத்தடையே விடுதலை அமைப்புக்களில் பல தரப்பட்ட பிரச்னைகளுக்கும் காரணமாகவும் அமைந்து விடுகின்றது. இந்த நிலையில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகமும் இத்தடையை தாண்டிச்செல்ல வேண்டியுள்ளது". (பா)

## "அதிவேக றைபிளால்' 1000 மீற்றரிலிருந்து சுடப்பட்டிருக்கலாம்"

[யாழ்ப்பாணம்]

"இறந்தவர் 1000 மீற்றர் தூரத்திற்குள்ளிருந்துஅதிவேக 'றைபிள்' துப்பாக்கியினால் சுடப்பட்டிருக்கலாம் என்பது எனது அபிப்பிராயமாகும்"

யாழ். பிரதான வீதியில் கடந்த மாதம் 19ம் திகதி பலியான மலைநாட்டு இளைஞர் அ பத்மநாதனின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த பேராசிரியர் என். சரவணபவானந்தன் இவ்வாறு கூறினார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ் நாகராசா முன்னிலையில் நேற்றுக்காலை மரண விசாரணை நடைபெற்றது.

கொலையெனத் தீர்ப்பளித்த நீதவான் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

## மக்கள் அவை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசின் இராணுவ நடவடிக்கைகளை விளக்கி சகல வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் மகஜர் அனுப்புவதென்று மக்கள் அவையின் மத்திய குழுக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

மக்கள் அவை அமைப்பாளர் திரு. ச.செந்தூராசா தலைமையில் இக்கூட்டம் யாழ் தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது.

கடல் பாதுகாப்பு வலயச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் பிரச்னைகள் குறித்து ஆராயுமுகமாக யாழ் மாவட்டத்திலுள்ள சகல கடற்றொழிலாளர் சங்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய பொது ஸ்தாபனங்களையும் எதிர்வரும் 8ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு அழைத்து ஆலோசனை நடாத்துவதென்றும், இவ்வாலோசனைக் கூட்டம் யாழ் அடைக்கலமாதா பாடசாலையில் நடைபெறுமென்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

## மரண அறிவித்தல்

### M. C. கனகரத்தினம்பிள்ளை

திருநெல்வேலியைச் சேர்ந்த திரு M. C கனகரத்தினம்பிள்ளை காலமானார் இவர் முன்னாள் கேரளத்தில் பிரபல புகையிலை வியாபாரியும், திருமதி இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், திருவனந்தபுரம் புகையிலை வியாபாரி திரு C. K முருகேசபிள்ளை, வாழைச்சேனை காகித ஆலையின் பிரதம கணக்காளர் திரு C. K. பத்மநாபபிள்ளை, திருமதி ராஜராஜேஸ்வரி, திருமதி அனுஷியா (கொல்லம் இந்தியா), திருமதி நளாயினி, திருமதி சாவித்திரி, திருமதி அருந்ததி கனடா], செல்வி கண்ணகி ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி நாகலட்சுமி [திருவனந்தபுரம்-இந்தியா], திருமதி பத்மினி, திரு இரகுபதி [விவசாய உத்தியோகத்தர் - திருநெல்வேலி] திரு முருகானந்தம் [வியாபாரி - கொல்லம்], திரு, கனகநாதன் [முன்னாள் Rowlands] திரு. சதானந்தன் [Asbestos Industries - ஈவினை], திரு கருணாகரன் [கனடா] ஆகியோரின் மாமனாரும் ஆவர் அன்னாரின் ஈமக்கிரியைகள் வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இராஜேஸ்வரி பவனம்,
No. 3, சேர். P. இராமநாதன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். [C 1088]

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை - சண்முகலிங்கம்

#### பண்ணாகம்

பண்ணாகத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை - சண்முகலிங்கம 5-3-86 (புதன்கிழமை) காலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், சரோஜினிதேவி, உமாதேவி, கெங்காதேவி, சிவராசா [சவூதி அரேபியா], புண்ணியமூர்த்தி [திருவையாறு, கிளிநொச்சி, துரை], கணபதிப்பிள்ளை [சவூதி அரேபியா] ஆகியோரின் அன்புத் தந்தையும், தம்பையா, இரத்தினசிங்கம், [சண்டிலிப்பாய் நாகபூஷணி மில்], பாலசிங்கம் [சவூதி அரேபியா], லோகரட்சனி, மீனலோஜனி, சந்திரலோஜனி ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் திருவடிநிலை மயானத்தில் 6-3-86 [இன்று] பகல் 12-00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[C 1084] பிள்ளைகளும், மருமக்களும்.

### பொன்னையா பீற்றர்



இளைப்பாறிய பிரபல ஜெயில் அதிகாரி பொன்னையா பீற்றர் காலமாகிவிட்டார். இவர் அன்னம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்றசெல்வி அருள்மலர், P.S. போல் (சுவிஸ்), பேளி, பபா, பிரான்சிஸ் காலமாகிய நெல்சன், விக்ரர் (பிரான்ஸ்), வோல்டன் (பிரான்ஸ்), பபி, ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி ராஜேஸ்வரி போல், சண் துரைசிங்கம், வசந்தா நெல்சன், சுகுணா விக்ரர் ஆகியோரின் அருமை மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (8-3-1986) பி ப. 4 மணியளவில் பரி. யோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சண் துரைசிங்கம்

ஈச்சமோட்டை,
சுண்டுக்குளி.
C 1082

### கிருஷ்ணபிள்ளை இராஜலிங்கம் [A. M. P.]

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவனும், காத்தான்குடி அரசினர் வைத்தியசாலை உதவி வைத்திய அதிகாரியுமான கிருஷ்ணபிள்ளை - இராஜலிங்கம் அவர்கள் 4-3-86ல் காலமானார். அன்னார் தும்பளை காலஞ்சென்ற விநாசித்தம்பி கிருஷ்ணபிள்ளையினதும் சின்னாச்சிப்பிள்ளையினதும் மகனும். சங்குவேலி தெற்கு நாகம்மாவின் அன்புக் கணவரும், இந்திரா (மட். வின்சன் மகளிர் கல்லூரி மாணவி]வின் அன்புத் தந்தையும், மனோன்மணி, குமாரவேல் [ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை] நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற இரத்தினசபாபதி, கமலாதேவி, சண்முகநாதன் [பிரதம லிகிதர், நீர்ப்பாசன இலாகா, கந்தளாய்] பார்பதிப்பிள்ளை. தம்பிராசா, துரைசிங்கம், சிரோன்மணி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் 6-3-86 வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் சங்குவேலி இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

க. சண்முகநாதன்,
கி. குமாரவேல்.
[C 1086]

### சோம சரவணபவன்

(ஓய்வுபெற்ற O. A. குருணாகல கச்சேரி.)

இவர் காலஞ்சென்ற திரு சோமசுந்தரம் (முன்னைநாள் இராமநாதன் கல்லூரி ஆசிரியர்) தம்பதிகளின்சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக்கணவரும், குகசோதி கனடா), செம்பற்சோதி (மட்ரூஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற முருகேசு (கச்சேரி, யாழ்ப்பாணம்.) தம்பதிகளின் மருமகனும், அமுதவல்லி (ஓய்வு பெற்ற ஆசிரியை இராமநாதன் கல்லூரி), முருகையா (ஓய்வுபெற்ற தபால் தந்தி திணைக்கள அதிகாரி) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம். பாலசுந்தரம காலஞ்சென்ற சண்முகசுந்தரம், இராஜேஸ்வரி, தற்பரசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும், றஞ்சி (கனடா) கனகசிங்கம் (மட்ரூஸ்), ஆலாலசுந்தரம் ஆகியோரின் மாமனாரும் சோமஸ்கந்தன், பாலஸ்கந்தன் ஆகியோரின் பெரிய தகப்பனாரும், கோணேஸ், யசோதரா, வசு, செந்தூரன், இவர்களின் பேரனுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று வியாழக்கிழமை (6-3-86) பி. ப 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

1ம் கட்டை ஒழுங்கை
உடுவில்,
சுன்னாகம்.

தகவல்:
மு. பாலசுந்தரம்
C 1087